www.padippakam.com

இணுவை. க.சக்திதாசன்



# காற்றைக் கானமாக்கிய புல்லாங்குழல்

மல்லிகைப் பந்தல்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# காற்றைக் கானமாக்கிய புல்லாங்குழல்


**இணுவை க. சக்திதாசன்**

(டென்மார்க்)



மல்லிகைப் பந்தல்

201/4 ஸ்ரீகதிரேசன் வீதி,
கொழும்பு - 13.
தொலைபேசி: 2320721


படிப்பகம்

www.padippakam.com

இது ஒரு மல்லிகைப் பந்தல் வெளியீடு

| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | ஜூன் 2008 |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| பக்கங்கள் | : | 72+xxii |
| விலை | : | 150/= |
| அட்டை வடிவமைப்பு | : | மேமன் கவி |
| கணினி அச்சமைப்பு | : | எஸ். சாந்தகுமாரி |

ISBN: 978-955-8250-41-9

அச்சிட்டோர்:
**Happy Digital Centre (Pvt) Ltd.**
No: 75/1/1, Sri Sumanatissa Mawatta,
Colombo - 12.

www.padippakam.com

**சமர்ப்பணம்:**



**அப்பாவுக்கும்,**
**அம்மாவுக்கும்**

படிப்பகம்

www.padippakam.com

முன்னுரை

# ஒரு நிலப்பரப்பின் வரைப் படங்களாக......

ஈழத்துத் தமிழ் பேசும் சமூகம் எதிர்கொண்ட புலம் பெயர்வானது, ஈழத்துத் தமிழ் கலை இலக்கிய வளர்ச்சியில் ஒரு புதிய பரிமாணத்தை ஒருவாக்கியது எனலாம். இன்னும் ஆழமாகக் கூறுவது என்றால், இற்றை வரையிலான நவீன தமிழ் கலை, இலக்கியம் கண்டிராத ஒரு போக்கினை அப்புலம்பெயர்வு ஏற்படுத்தியது எனலாம். இவ்விடத்தில், இன்னுமொன்றை குறிப்பிட வேண்டும். தமிழ் பேசும் சமூகம் என்னும் பொழுது, தமிழகத்திலிருந்து புலம் பெயர்ந்த தமிழ் சமூகத்தினால் நவீன கலை, இலக்கிய உலகுக்கு எந்தவொரு பாரிய தாக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை. மாறாக, ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்த தமிழ் பேசும் சமூகம், கணிசமான அளவு நவீன தமிழ் கலை, இலக்கியத்திற்கு தனது பங்களிப்பை நல்கி வருகிறது. இந்தப் பங்களிப்பின் தாக்கத்தினால்,



படிப்பகம்

www.padippakam.com

பிற்காலத்தில், தமிழகத்திலிருந்து புலம்பெயர்ந்தவர்களும் ஒரு சிலர் இப்பங்களிப்பில் இணைந்து கொண்டதை மறுப்பதற்கில்லை.

ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்தவர்கள் மூலம் நவீன தமிழ் கலை, இலக்கியத்திற்கு பங்களிப்பு என்கின்ற பொழுது, புலம் பெயர்ந்த ஈழத்தைச் சார்ந்தவர்களால் முதல் கட்டத்தில் படைக்கப்பட்ட கலை, இலக்கியங்களில் பிறந்த மண்ணை விட்டு பிரிந்து வந்த சோகத்தைக் எடுத்துக் காட்டின. இத்தகைய வெளிப்பாடு ஏலவே, தமிழ் இலக்கிய பதிவுகளில் பதியப்பட்டு இருப்பினும், அடுத்து வந்த காலகட்டங்களில் மேலைத்தேய சமூகமானது, கீழைத்தேய சமூகத்தை நோக்கிய விதமும், அந்த நோக்கின் காரணமாக, கீழைத்தேய சமூகத்தினர் எதிர் கொண்ட பிரச்சினைகளைப் பதிவு செய்யும் வகையில் அமைந்தன. இவ்வம்சமே தமிழ் கலை, இலக்கியப் போக்கில், இற்றைவரை இடம் பெறாத அம்சமாக இருந்தது.

மேலைத்தேயம் கீழைத்தேசத்தை நோக்கிய விதம் என்னும் பொழுது, ஒரு பிராந்தியத்தையிட்ட எதிர்பார்ப்பு, தோல் நிற வேறுபாட்டின் மூலம் அதுவரை காலம்- கறுப்பு இன மக்களும், கீழைத்தேய பிராந்தியத்தைச் சார்ந்த ஏனைய சமூக மக்களும் இலக்கியங்களில் பதிவு செய்தார்கள். ஆனால், மேற்குறித்த அனுபவங்கள் தமிழ் கலை, இலக்கியங்களில் முதல் முதலாகப் பேசப்பட்டது. ஈழத்திலிருந்து புலம் பெயர்ந்தவர்கள் படைத்த படைப்புக்களில் என்பது இங்கு குறிப்பிடத்தக்க ஓர் அம்சம். இவ்வாறான இவர்களின் பங்களிப்பின் மூலம், உலகத் தமிழ் இலக்கியம் ஒன்றினை இனங்காண ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்தவர்கள் கணிசமான பங்களிப்பை ஆற்றி வருகிறார்கள் என்பதை எமக்கு எடுத்துக் காட்டியது. உலகத் தமிழ் இலக்கியம் என்கின்ற பொழுது, பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்களால் படைக்கப்படும் இலக்கியங்கள் என்பதோடு, இன்றைய உலகப் போக்கில் நிலவும் பல்வேறு போக்குகளை, தமிழ் மொழி சூழலில் பேசுகின்ற இலக்கியங்களையும் உலகத் தமிழ் இலக்கியம் என இனங்காண வேண்டி இருக்கிறது.

இத்தகைய சிந்தனைப் போக்குகளின் அடிப்படையில் இணுவை சக்திதாசன் அவர்களின் படைப்புக்களை நோக்குகின்ற பொழுது,



படிப்பகம்

ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்தவர்களால் முதல் கட்டத்தில் படைக்கப் பட்ட பிறந்த மண்ணை விட்டு வந்த சோகம் கவிதைச் சித்திரங்களாகப் பதிவாகி இருக்கின்றன. இக்கவிதைச் சித்திரங்களின் மூலம், நாம் ஒரு நிலப்பரப்பின் வரைபடங்களை தரிசிக்கக் கூடியதாகவும் இருக்கின்றது.

அச்சித்திரங்களை இவர் வெறுமனே உள்ளடக்க வழியாக மட்டுமின்றி, அவ்விடயங்களை எடுத்துச் செல்லும் மொழியில் கணி சமான படைப்புக்களில், வடிவமைத்து தருவது அச்சித்திரங்களினூடாக முன்விரியும் நிலப்பரப்புடன் உணர்வு பூர்வமாக நம்மைக் கலந்து கொள்ளச் செய்கின்றன.

ஆச்சியின் வளவு முதற் கொண்டு, தாழ்வாரத்தில் குந்தியிருந்து, இயற்கையோடு இரண்டறக் கலந்த வாழ்வு தொலைந்து போய், ஒரு தாழ்வார அளவான ஒரு வீட்டில் சிறைப்பட்டுப் போன இருப்புக்களின் குரல்களால் இவரது கவிதைகள் அமைந்துள்ளன.

கவித்துவம், ஆக்கத்திறமை ஒரு கவிதைக்குத் தேவையான அம்சங்கள் பற்றிய நமது அக்கறையை, இவரது கவிதைகளில் வரையப்பட்டு இருக்கும் சித்திரங்களும், குரல்களும் பின்தள்ள வைத்து விடுகின்றன.

நாம் மேலே சொன்னதற்கு இணங்க மேலைத்தேய சமூக இருப்பில் தம்மைப் பிணைத்துக் கொண்ட கீழைத்தேய சமூகத்தின் கலாசார, மற்றும் பண்பாட்டு ரீதியான உணர்வுகள், மற்றும் நடைமுறைகள் மீது, மேலைத்தேய சமூக இருப்பு ஏற்படுத்தும் அதிர்வுகள் பற்றிய சித்திரிப்புக்களாவும், இவரது கவிதைகள் அமைந்துள்ளன.

சந்தர்ப்பவசத்தினால், எதிர்நிலையான (காலசாரம், பொருளாதாரம், மொழி போன்ற வகையில்) ஒரு சமூக கட்டமைப்பில் தனது இருப்பை மேற் கொள்ளும் ஒரு சமூகத்தின் முதல் தலைமுறையினர்- இத்தகைய ஏக்கத்திற்கும், பரிதவிப்புக்கும் ஆளாகி விடுவதை காண்கின்ற எமக்கு, அச்சமூகத்தின் அடுத்த தலைமுறை அந்த இருப்பை எந்த நிலையில் எதிர் கொள்ளப் போகிறது? அவ்வாறாக எதிர் கொள்ளும் தலைமுறைப்

பிணைப்பைக் கொண்ட, எதிர்நிலையான அச்சமூகக் கட்டமைப்புடன் மேலும் இறுக்கமாகப் பிணைத்துக் கொள்ளுமா? அல்லது முரண்பட்டு நிற்குமா? என்கின்ற கேள்விகளும் சக்திதாசன் போன்றோரின் படைப்புக்களைப் படிக்கின்ற பொழுது தவிர்க்க முடியாமல் எமக்குள் எழத்தான் செய்கிறது.

இவ்வாறான உணர்வு நிலைக்கு ஆட்படுத்தும் சக்திதாசன் படைப்புக்கள் நவீன தமிழ் கலை, இலக்கிய வளர்ச்சிக்குப் புலம் பெயர்ந்தவர்களால் வழங்கப்படும் பங்களிப்பில் இவரது பங்கும் கணிக்கத்தக்கதாக இருக்கிறது என்பதை நமக்கு எடுத்துக் காட்டுகிறது.

**மேமன்கவி**
**memonkavi@yahoo.com**

www.padippakam.com



# ஒரு மூங்கில் கிளையொன்று புல்லாங் குழலாகின்றது!

நான் முகம் தெரியாமல் கவிதையின் மூலமாகத் தெரிந்து கொண்ட ஒரு கவிஞன் தம்பி சக்திதாசன்.

வானொலியில் நான் '**கவிதை நேரம்**' நிகழ்ச்சியைத் தயாரித்து வழங்கிக் கொண்டிருந்த காலத்தில், காற்றலைகள் சுமந்து வந்த இவரின் கவிதைகள் மூலமாகவே நான் இவரைத் தெரிந்து கொண்டேன்.

சக்திதாசன் அவர்கள் தெய்வப் பற்றினையும், தேசப் பற்றினையும், மொழிப் பற்றினையும் தன்னிடத்தில் கொண்டிருப்பவர் என்பதனை இவரின் கவிதைகள் மூலமாகத் தெரிந்து கொண்டேன். அதற்குச் சரியான சான்று இவரின் முதலாவது கவிதைத் தொகுப்பான '**நெஞ்ச நெருடல்**' என்னும் கவிதை நூலாகும்.

மனங்களில் ஒலிக்கின்ற மெல்லிய மன ஓசைகளை ஓர் இரசாயனக் கலவைபோல், வடித்துத் தருபவன் கவிஞன். இந்தக் கவிதைத் தொகுப்பு ஒரு இரசாயனக் கலவையைப் போல, பல்வேறு விதமான கவிதைகளை உள்ளடக்கி இருக்கின்றது.

சூதுவாதும், சுரண்டலும், அச்சமும், அடிமைத்தனமும் முற்றாக ஒழிந்து, பண்பாடும், பாதுகாப்பும், அன்பும், ஒற்றுமையும், வாய்மையும், நீதியும் நிறைந்த ஓர் சுதந்திர தேசத்தை இவர் விழைவதை, இந்தத் தொகுப்பில் உள்ள கவிதைகள் வேண்டி நிற்கின்றன.

இன்று உலகமெல்லாம் யுத்தத்தால் முழங்கும் வெடியோசைச் சத்தங்களே அதிகமாகக் கேட்கின்றன. அந்தச் சத்தங்களுக்கு மத்தியிலும் இடையிடையே இவை போன்ற புல்லாங்குழல்களும் நளினமாக ஒலிக்கத்தான் செய்கின்றன.

ஒவ்வொரு மனிதர்களுக்குள்ளும் கண்ணுக்குத் தெரியாத கண்ணீர்க் கறைகளும், உறைந்து போன உதிரச் சுவடுகளும் இருக்கத்தான் செய்கின்



படிப்பகம்

றன. ஆனால், அவை படைப்பாளியின் பேனாவில் இருந்து வெளிப்படும் போது, மரணித்த பிணங்களின் மனங்களைக் கூடப் பதைபதைக்க வைத்து விடுகின்றான். அதிலும் ஒரு கவிஞன் சொல்லும் போது, அந்தப் பிணங்களை வாய்விட்டு அழ வைத்து விடுகின்றான்!

இங்கு சக்திதாசனின் கவிதைகளும் அப்படித்தான் இருக்கின்றன. கண்டிப்பாக வெளிநாடுகளில் உயிர்ப்பே இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பல உயிர்களைப் பேச வைக்கும். அப்படிப் பேச வைத்திருக்கின்றார், தம்பி சக்திதாசன் அவர்கள். அதற்காக இதில் உள்ள பல கவிதைகளை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளலாம். ஆனாலும், ஒரு சில கவிதைகளையே நான் தொட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

இந்தக் கவிதைத் தொகுப்பின் தலைப்பே மிகவும் ரசிக்கத்தக்கதாக இருக்கின்றது. பரந்து கிடக்கும் காற்றை உள்ளே இழுத்துப் பின்னர் அதை நாதமாகக் கொடுப்பது புல்லாங்குழலின் வேலை. ஆனால், சக்திதாசனோ காற்றுக்கு எட்டிய தூரமெல்லாம் இந்தப் புல்லாங்குழல் தேடிச் சென்று நாதம் இசைக்கும் என்பதைச் சொல்லாமல் சொல்லியிருக்கின்றார்.

இந்த அழகான தலைப்பிற்காகவே 'காற்று வழி' என்னும் தலைப்பில் ஒரு கவிதையைப் புனைந்து அதன் இறுதி வரிகளில்.........

***நேற்றுவரை***
***காற்றுப் படாமல் இருந்த***
***புல்லாங்குழல் மீது***
***காற்றுப் பட்டது!***
***நேற்றுவரை***
***கவிதை***
***படாமலிருந்த***
***கவிதை நெஞ்சத்தின்மீது***
***கவிதை பட்டது!***

- என முடித்து, எனது புருவங்களை உயர வைத்திருக்கின்றார்.

நாமெல்லாம் எமது சொந்தக் குடியிருப்புக்களை விட்டுப் பிரிந்து, பல ஆயிரக்கணக்கான மைல்களைத் தாண்டி, பலரும் பல திசைகளாக வாழ்ந்தாலும், அடிக்கடி எங்கள் கனவுகளில் நாம் வாழ்ந்த கிராமங்களும் வந்து போகத்தான் செய்கின்றன. அதிலும் எங்களது சிறு பராயத்து

நினைவுகள் வரும் போது தொலைந்து போன அந்த வாழ்வை நினைத்து ஊமைக் கண்ணீர் வடிப்பதுண்டு. அப்படி ஒரு நினைவாக இவர் எழுதியிருக்கும் கவிதைதான் **'ஆச்சி வளவு வெளிச்சுப் போச்சு'** என்னும் கவிதை. அதில் வரும்-

*பிஞ்சு மாங்காய்க்குக் கல்லெறிஞ்சு*
*ஓடியொழிஞ்ச குஞ்சு குருமனெல்லாம் - இப்ப*
*வெளிநாடு போனதாலை*
*மாங்காய் தானிப்போ புழுத்துப் போச்சுது!*
*ஆச்சி வளவுக்குள்ளை*
*மாங்காய் தானிப்போ புழுத்துப் போச்சுது!*

என்ற அந்த வரிகளின் மூலமாக மீண்டும் நமது நினைவுகளை நாம் ஓடி விளையாடிய எங்கள் தாய் மண்ணுக்கே கொண்டு சென்று விடுகின்றார். இது போல **'ஒரு ஏழையின் முதலிரவு'** என்னும் கவிதையில்..........

*பக்கதில் நிலவிருந்தது*
*தேயாமல் தேயும் ஆடைக்குள்*
*சொர்க்கத்துத் தேன் துளியாய்*
*வியர்வையும் இனித்திடும் இரவு*

என்னும் அந்த வரிகளில் கவிஞரின் உவமை நயமும் அவரின் வாலிபத்தின் துள்ளலையும் ஒன்றாகவே பார்க்க முடிகின்றது.

இன்று எமது மண்ணில் நடக்கின்ற யுத்தத்தால், யுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற இரு தரப்பினர் மட்டும் காயமடைவதில்லை, மரணமடைவதில்லை. யுத்தத்தில் சம்பந்தப்படாத ஏராளமானவர்கள் இனி மீளப் பெறமுடியாத அளவிற்கு எண்ணற்ற பாதிப்புக்களுக்கு ஆளாகியிருக் கின்றார்கள். இதில் புலம் பெயர்ந்தவர்களும் அடங்குகின்றார்கள்! அப்படியான வர்களின் உணர்வுகளை வெளிச்சம் போட்டுக் காட்டும் விதமாகப் **'புன்னகை யிழந்த மானுடம்'**, **'ஊமை விழிகள்'** போன்ற இன்னும் சில கவிதைகளின் மூலமாக வெளிப்படுத்தியிருக்கின்றார். அதே நேரத்தில், புலம் பெயர்ந்த பின்னர் கிடைத்த சொகுசு வாழ்வினினால் சொந்த மண்ணை மட்டுமல்ல, பெற்றவர்களை, சொந்தகங்களை இப்படியாகப் பலதையும் மறந்தவர்களின் மீதான தனது கோபத்தை **'இவர்கள் எப்படி? இப்படி?'**, **'இங்கும் சிலர்'** போன்ற கவிதைகளின் மூலமாகக் காட்டியிருக்கின்றார். இவை ஒரு படைப்பாளிக்கு இருக்க வேண்டிய சமுதாயப் பொறுப்பும் மனக் குமுறலுமாகும்.

www.padippakam.com

இப்படியாக இந்தக் கவிதைத் தொகுப்பில் பதியப்பட்டிருக்கும் ஒவ்வொரு கவிதைகள் மூலமாகவும் நமக்கு ஒவ்வொரு செய்தியைச் சொல்லி வைத்திருக்கின்றார். இதில் உள்ள நிஜம் சார்ந்த கவிதைகளை மிகக் கவனத்தோடும் படைத்திருக்கும் தம்பி சக்திதாசன் அவர்களின் இந்தக் கவிதைத் தொகுப்புக் காலம் கடந்தும் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை.

இந்தக் கவிதைத் தொகுப்பைப் படித்துக் கொண்டிருக்கின்ற வாசகர்களுக்கு ஒன்று சொல்லிக் கொள்கின்றேன். நீங்கள் இந்தப் புத்தகத்திற்காகக் கொடுத்த பணம் உங்கள் செலவுகளில் ஒன்று அல்ல. இந்தப் புத்தகம் நீங்கள் தேடிக் கொண்ட பொக்கிஷங்களில் ஒன்று! இது போன்ற படைப்புக்கள் மேலும் மேலும் வருவதற்காக நீங்கள் கொடுத்த நன்கொடை!

தம்பி சக்திதாசன் அவர்களுக்கும் அவரது இந்தக் கவிதைத் தொகுப்பை வெளியிட முன் வந்த பதிப்பகத்தாருக்கும் எனது வாழ்த்துக்கள். வாசகர்க ளுக்கு எனது வணக்கங்கள்.

கலைஞர் காவலர்<br>வண்ணை தெய்வம்<br>பாரீஸ்.



படிப்பகம்

www.padippakam.com

# புதுமைக் கற்பனைக்கு கடைவிரிக்கும் கவிஞர் தம்பி இணுவையூர் சக்திதாசன்.!

மலர்கள் செடியில் இருப்பதால் சிறு அழகு. அதை மாலையாக்கிப் பார்த்தால் பேரழகு என்பது போலத்தான், அனைத்துப் பொருட்களும். முத்து, பவளம், தங்கம், வைரம் போன்றவையும் தனியே வைத்து அழகை இரசிக்கும் போதும், அவைகளைக் கொண்டு எம் கற்பனைக்கு ஏற்ப வடிவம் செய்து பார்த்தால், அவைகள் பேரழகாகத் தெரிகின்றன. கற்பனையால் மெருகுபடுத்தி வடிவத்தை கண்ணோக்கும் போது எம்மைப் பிரமிக்க வைக்கும், அந்த வடிவம். இதே நிலையில் தான் தமிழும், தமிழ் சொற்களும். தமிழுக்கு அமுதென்று சொன்னார்கள் அன்றைய புலவர்கள். அந்த அமுதான தமிழ் தான் உயர்வுக்கு உயர்வூட்ட அமுதம் சுரக்கின்றது. சொற்களைத் தனியே சொல்லும் போது ஒருவித இனிமையும், அதில் பல சொற்களைச் சேர்த்து ஒரு வரியாக்கிப் படிக்கும் போது அதிக சுவை தெரிவது போல், அந்த வரிகளோடு வரியின் கருவுக்கேற்ப சிறு கற்பனையையும் கலந்து நாலடிக் கவிதையாக்கினால் அதன் சுவை பெரும் அமிர்தம் நிறைந்து சுவையாகத் தென்படும்.

தம்பி சக்திதாசன் அவர்களின் கற்பனை நிறைந்த கவி வரிகளும் எனக்கு சிலவேளைகளில் பேரானந்தத்தைத் தருகின்றது. கற்பனை வளம் நிறைந்த இளம் கவிஞரான இவர் தனது இரண்டாவது வெளியீடாகக் **'காற்றைக் கானமாக்கிய புல்லாங்குழல்'** என்ற ஒரு கவிதை நூலை வெளியிட முன் வந்துள்ளார். புலம் பெயர் வாழ்க்கையில் நேரம் ஒன்றே கிடைக்காத சூழலில், தனது உள்ளத்து உணர்வில் ஊன்றிய பயிரான தமிழ் உணர்வின் உந்துதலால், ஏதோ நானும் ஏதாவது தமிழுக்குச் செய்ய வேண்டும் என்ற



படிப்பகம்

உறுதி கொண்ட நெஞ்சோடு தனது முதல் படைப்பான 'நெஞ்சத்து நெருடல்' என்ற கவிதைத் தொகுப்போடு மக்கள் முன் அரங்கேறி, தனது குரல் வளத்தால் கலை உணர்வால், கற்பனை மிதக்கும் கவி வடிவால், மக்கள் முன் வளர்ச்சி கண்டு மக்களின் அங்கீகாரத்தோடு தனது இரண்டாவது படைப்பான **'காற்றைக் கானமாக்கிய புல்லாங்குழல்'** என்ற கவிதைத் தொகுப்போடு உங்கள் முன் வந்து நிற்கின்றார். அவரை வரவேற்று, ஊக்குவித்து உற்சாகப்படுத்தி முன்னெடுத்துச் செல்வது வாசகராகிய உங்களது கட்டாயக் கடமையாகும் என்பதே எனது வேண்டுகோளாகும்.

தம்பி சக்திதாசனின் கற்பனா சக்தியை, அவரின் கவிதை உள்ளத்தை, கலைத்திறனைக் கண்டவர்கள், கேள்விப்பட்டவர்கள் எவரும் அவரின் திறமையைப் போற்றாமல், பாராட்டாமல் இருக்கமாட்டார்கள். அந்த வரிசையில் ஒருவன் தான் நானும்....... இந்த நேரத்தில் அறிஞர் பெர்னாட்ஷாவின் சில வரிகள் ஞாபகத்துக்கு வருகின்றன. அவர் தனது வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்கள் எதுவானாலும், அதை மேற்போக்காகக் கண்டு மருந்திட்டுச் செல்லாமல், அதன் அடிப்படைக் காரணத்தைக் கண்டு அதற்கு தீர்வோ, மருந்தோ செய்து அதை, இல்லாமல் செய்து விடுவதே அவரின் வழிமுறையாம். அதை அவர் தனது இலக்கியப் பயணத்தில் கைக்கொண்டதாகப் பலர் எழுதப் படித்திருக்கின்றேன். அந்தப் பாதையே அவரைப் பிற்காலத்தில் உலகம் போற்றும் கவிஞராக உயர்த்தியது. அதே போன்று சக்திதாசன் அவர்களும், எந்தக் கலை முயற்சியை எடுத்தாலும், ஆழமாகச் சிந்தித்து எந்தத் துயர துன்பத்தையும் அமைதியாகக் கடந்து, தன் பணியை இலட்சியக் குறிக்கோளோடு தொடர்பவராக எனக்குத் தெரிகிறார். அதனால், இவரை எதிர்காலமும் கட்டாயம் வரவேற்கும் என்ற பூரண நம்பிக்கையோடு நானும் மனதார வாழ்த்தி, இன்னும் பல நூல்களை வெளிக்கொணர வேண்டுமென எதிர்பார்க்கின்றேன்.

**வேலணையூர் பொன்னண்ணா**
**டென்மார்க்.**

www.padippakam.com

பதிப்புரை

# புலம் பெயரந்த தாசனும்-
# இடம் பெயர்ந்த நானும்!

இந்த மண்ணில் கடந்த காலங்களில் ஏற்பட்ட இனப் பிரச்சினையின் தீவிர நெருக்கடிகளின் காரணமாகப் புலம் பெயர்ந்தவர்தான், இந்த நூலின் ஆசிரியர், சக்திதாசன். அதே காரணங்களின் கட்டுக்கடங்கா எதார்த்த நிலைமைகளின் காரணமாகப் பிறந்த ஊரை விட்டு, வீடு வாசல்களைத் துறந்து தலைநகருக்கு இடம் பெயர்ந்தவன் தான், நான். அதாவது இந்த நூலை வெளியிட்டு வைக்கும் வெளியீட்டாளன்.

புலம் பெயர்ந்தது ஒருவகை இழப்பென்றால், இடம்பெயர்ந்து, வேர் விட்டுத் துளிர்க்க முனைவது இன்னொரு வகைச் சோகம்.

இரண்டையும் ஒன்றென்று சொல்லிவிட முடியாது. ஆனால், இவ்விரண்டுமே ஒன்று போலச் சில சமயங்களில் சிலருக்குத் தென்படக் கூடும். அதே சமயம் இவ்விரண்டு பெயர்வுகளுக்குமிடையே பாரிய வேறுபாடுகளு முண்டு.

புலம் பெயர்ந்தவர்களின் ஆத்ம வேதனையை- அவர்களினது சோகத்தின் ஆழத்தை, இடம் பெயர்ந்து இடையிடையே அதன் காரணமாக அல்லற்பட்ட காரணத்தால் என்னால் சரிவரப் புரிந்து கொள்ள முடிகின்றது.



படிப்பகம்

www.padippakam.com

'புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்கள் கனடாவில் மாத்திரம் இரண்டு இலட்சம் பேர் வாழுகின்றனர். உலகம் பூராகவும் பரந்து விரிந்த கண்டங்களில் நமது நாட்டைச் சேர்ந்தவர்கள் ஒன்பது லட்சம் பேர் வசிக்கின்றனர்!' எனக் கனடாவில் வாழும் 'நம்ம' கவிஞர் சேரன் தமிழ்நாட்டில் நடந்த ஓர் இலக்கிய விழாவில் புள்ளி விவரங்களை மேற்கோள் காட்டிப் பேசியுள்ளார்.

அந்தப் பரந்துபட்டுச் சிதறிப் போய் வாழ்ந்து கொண்டிருப்பவர்களில் இந்தச் சக்திதாசனும் ஒருவர்.

அவர் தனது நெஞ்சக் கொதிப்புக்களையும், மன ஆவேசங்களையும் நேர்நிலைச் சிந்தனைகளையும் கவிதை மொழிக்குள் உள்ளடக்கி, இந்த நூலை ஆக்கித் தந்திருக்கின்றார்.

இவர் பிறந்த ஊர், இணுவில்- யாழ்ப்பாண நகரத்துக்கு வெகு அருகாமையிலுள்ள வளமான ஊர் இணுவில். பல கலைஞர்களைத் தந்துதவிய ஊர் இது. கல்வித்துறையில் பெருந்தகைகளைத் தமிழுக்கு நல்கிய ஊரும் இந்த ஊர்தான். ஒருகாலத்தில் வடபகுதியில் பிரபலமாக விளங்கிய வைத்தியசாலையாகப் புகழ் பெற்றிருந்த **'இணுவில் ஆஸ்பத்திரி'** இயங்கி வந்ததது கூட, இந்த ஊரில்தான்!

புலம் பெயர்ந்து பவேறு நாடுகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் இளைஞர்களின் மனத் தவிப்பை எழுத்தாளன் என்கின்ற முறையில் இன்று என்னால் முற்று முழுதாகப் புரிந்து கொள்ள முடிகின்றது.

மல்லிகைக்கு வரும் தொலைபேசிச் செய்திகள், கடித இலக்கியங்கள் எல்லாம் இந்த மனத்தவிப்பை எனக்குத் துலாம்பரமாக தெரியப்படுத்துகின்றன.

''நீங்கள் சொந்த நாட்டிலிருந்து கொண்டு, வசதிக்கேற்ற நியாயம் கதைக்கிறியள். நமது கற்பனைகளை, நெஞ்சக் குமுறல்களை, அந்நிய நாட்டில் நமக்கேற்படும் அவஸ்தை மிக்க அநுபவங்களை நாங்கள் எழுத்தில் வடித்துப் புத்தகம் போட முயலும் போது, கிண்டலடித்து அதையும் தடை செய்யப் பார்க்கிறீர்கள். இந்த மனச் சுமையைக் குறைக்க, எமக்கு நீங்கள் மெய்யாகவே உதவி புரிந்தால் என்ன?'' எனக் கடிதங்கள், தொலைபேசிப் பேச்சுக்கள் நம்மிடம் நியாயம் கேட்டுச் சண்டையிட்டு வருகின்றன.

ஓர் உரையாடலில் இப்படிக் கேட்டார், இவர். இந்தக் கோபம் கொண்ட இளந் தலைமுறையினனின் கேள்வியின் நியாயத் தன்மையை உணர்ந்து,



படிப்பகம்

www.padippakam.com

இந்தக் கவிதைத் தொகுதியை **'மல்லிகைப் பந்த'**லின் வெளியீடாக வெளியிட முன் வந்துள்ளேன்.

சமீபத்தில் கொழும்பில் நடைபெற்ற இலக்கிய விழாவொன்றில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் பழுத்த புத்திஜீவி ஒருவரைச் சந்தித்தேன். அவருடன் பழைய நட்பின் நிமித்தமாகச் சுமுகமாக உரையாடிக் கொண்டிருந்தேன்.

இடையே "நீங்களெல்லாம் ஒரு மனுசராப்பா, என்ன? பிறந்த மண்ணை அடியோடு மறந்து போய் விட்டிட்டீங்களே! எங்களைப் பாருங்கோவன். இப்பவும் எங்கட ஊரிலைதான் சீவிச்சுக் கொண்டு வருகிறம். பிறந்த மண்ணை விட்டு அகலவேயில்லை!" என்றார் உஷ்ணமாக.

எனது இடப் பெயர்வைக் காரணம் காட்டித் தான், குத்தாமல் குத்தி, இந்தக் கருத்தைச் சொன்னார், அவர்.

நான் இடம் பெயர்ந்து இன்று செய்யும் வேலையை அங்கிருந்து கொண்டு, மண்ணை நேசித்தபடி செய்ய முடியுமா? என்பதை அவர் சிந்தித்துப் பார்த்ததாகக் கூடத் தெரியவில்லை. அது அவரது நோக்கமுமல்ல.

அவருக்கு ஓய்வூதியம் கிடைக்கிறது. அவரது மனைவிக்கும் அப்படியே. அத்துடன் அயலிலுள்ள ஆசிரியைகளுடன் சீட்டுப் பிடிப்பது உபதொழில். மகள் வழிப் பேத்தியின் 'சாமர்த்தியச் சடங்கி'ற்குச் சமீபத்தில் தான் அவுஸ்திரேலியா போய் வந்து, ஊர் போய்ச் சேர, கொழும்பில் தங்கியிருக்கின்றனர்.

மூத்தவன் லண்டனில். நடுவிலான் சுவீஸில். ஊரிலோ அடி வளவுத் தென்னை மரங்களைக் கள்ளிறக்கக் குத்தகைக்குக் கொடுத்து விட்டு, வெகு வசதியாக மண்பாசத்துடன் பிறந்த ஊரில் இன்று வாழ்ந்து வருகின்றனர்.

எம்மைப் போன்றவர்களால் இப்படியான வசதி வாய்ப்புக்களுடன் வெகு சொகுசாக வாழ்ந்து விட இயலுமா, என்ன?

வாழ்ந்து கொண்டிருப்பது எங்கு என்பது அல்ல, இன்றைக்கு நம் முன்னுள்ள பிரதான கேள்வி. நட்ட நடுச் சமுத்திரத்திலுள்ள ஒரு சிறு தீவில் வாழ்ந்து கொண்டிருந்தாலும், பிறந்த மண்ணுக்கும், பேசும் தாய் மொழிக்கும் என்னத்தைச் சாதிக்கின்றோம் என்பது தான் எம்முன்னுள்ள பிரதான கேள்வியாகும்.

இந்த மண்ணில் பிறந்தவர் தான் சக்திதாசன். இன்று 'டென்மார்க்'கில் வாழ்ந்து கொண்டிருக்கிறார். உடலால், உணர்வால், நெஞ்சத்தால் அவர் தான்



படிப்பகம்

www.padippakam.com

பிறந்த இந்த மண்ணை நேசிக்கின்றார். பிறவி எடுத்த இந்தப் பூமி மீது தனிப் பாசம் கொண்டுள்ளார்.

அதன் வெளிப்பாடுதான் இந்தக் கவிதைத் தொகுதி. அவரது மன உணர்வுகளை இந்த எழுத்துக்கள் மூலம் நீங்கள் புரிந்து கொண்டாலே, போதும்.

இணுவிலைப் பெருமை மிக்க பூமியிது, என்று இன்றுவரையும் பலரதும் பாராட்டக் கேள்விப்பட்டிருக்கின்றேன்.


அந்த மண்ணில் பிறந்தவர் தான் இந்த நூலின் ஆசிரியர் சக்திதாசன். இளம் வயதில் என்னைப் பற்றித் தெரிந்திருக்கலாம்; அல்லது கேள்விப்பட்டும் இருக்கலாம். நான் இவரைப் பார்த்தில்லை.

பின்னால், இவர் தொலைபேசியில் தன்னைப் பற்றிச் சொல்லித் தொடர்பு கொண்ட சமயம், இவரது ஆர்வத்தையும், அடங்கா இலக்கியப் பசியையும் என்னால் புரிந்து கொள்ள முடிந்தது.

"நீங்கள் ஊரில் இருந்து கொண்டு வசதிக்கேற்ற ஞாயம் கதைக்கிறீர்கள்! எங்களைப் போன்றவர்களும் எழுத்துலகில் இடம் பெற முயற்சி செய்வதற்கும், எங்களுடைய திறமைகளை வளர்த்தெடுப்பதற்கும் உங்களைப் போன்றவர்கள் பக்கத்துத் துணையாக உதவினால் என்ன?" என ஓர் உரையாடலில் கேட்டார், இவர்.

அவரது இந்த ஆர்வமும், விடா முயற்சியும் தான் எனக்கு இவர் மீது ஒரு பிடிப்பை ஏற்படுத்தியது.

அன்னாரது ஆர்வத்தில் மிளிர்ந்த கவிதைப் படைப்பை இன்று நூலுருவில் உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.



- டொமினிக் ஜீவா

201/4 ஸ்ரீ கதிரேசன் வீதி,
கொழும்பு. 13.



படிப்பகம்

www.padippakam.com

# உங்களோடு
# ஒரு சில வார்த்தைகள்.......!

*எனக்கு அகவை முப்பத்தொம்பது!*
*என் கவிதைக்குப் பத்தொம்பது- நான்*
*பக்குவப்படும்வரை காத்திருந்து என்னை*
*கரம்பிடித்த காதல் தேவதை*
*இந்தக் கவிதை!*

*புலம்பெயர்ந்த போது என்னை*
*எனக்கே அறிமுகம் செய்வித்து,*
*நண்பர்களிடத்தில் கை குலுக்க வைத்தது.*

*சிந்திக்க வைத்து,*
*சிநேகிதமாய்*
*கவி மனசுகளைச்*
*சந்திக்க வைத்தது.*
*எழுது, எழுதுவென, என்னை*
*ஊக்குவித்து உயர்வித்தது!*



படிப்பகம்

www.padippakam.com

*பிறப்பிலேயே கவிஞர்கள்*
*பிறப்பதில்லையாமே- உண்மை!*
*காலத்தால் உருவாக்கப்படுகிறார்கள்!*
*அந்த வகையில்- புலத்தில்*
*தமிழர்கள் வாழும் நிலமெங்கும்*
*தலைக்கனமில்லாமல்- பல*
*புதுக்கவிஞர்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.*
*அவர்களில் ஒருவன் தான் நான்!*

இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் புதுக்கவிதைகள் எனும் பெயரில் பழைய இலக்கிய மரபுகளையெல்லாம் உடைத்தெறிந்து புதிய கவிதையுலகமொன்று தோன்றியது. இந்தக் கவிதையுலகம் பழைய பாரம்பரியத்தில் தோன்றிய கவிதைகளை மரபுக் கவிதைகள் எனப் புதுப் பெயரிட்டு இனம் பிரித்துக் காட்டும். இந்த இரு வேறுபட்ட கவிதைக்குள்ளேயே பல வேறுபாடுகள் உள்ளன.

இதை ஆராயப் புகுந்த அறிஞர்கள் பலரும் பல விதமான வரைவிலக் கணங்களைக் கொடுத்திருந்தாலும், இன்னும் சரியான வரைவிலக்கணம் வகுக்கப்படவில்லை என்றும் ஒரு குற்றச்சாட்டு சில அறிஞர்களால் முன் வைக்கப்பட்டிருக்கின்றது. இந்த புதுக்கவிதைக்குள்ளேயே........ இலக்கணத் தைத் தேடித் தோற்றவர்களும் உண்டு!

2003 இல் நெஞ்ச நெருடல் (கவிதைத் தொகுப்பு) மூலம் உங்கள் முன்னால் அறிமுகமான நான், மீண்டும் 5 வருடங்கள் என்னை நானே அடைகாத்தேன். கம்பனில் இருந்து வைரமுத்து வரை; பாரதியில் இருந்து பாரதிதாசன் வரை அத்துணை கவிஞர்களின் கவிதைகளுக்குள்ளும் புகுந்திருந்து தேடல் செய்தேன். ஒவ்வொருவர் எழுத்துக்களோடும் சண்டையிட்டேன் பின் சரணடைந்தேன்

தேவார திருவாசகத்திலிருந்து திருப்புகழ் வரை, அதன் கவித்துவத்தை ஆராதனை செய்தேன். கவிப் பேரரசின் சில கவித்துளிகள்- என்னைச் சிலிர்தெழ வைத்தது. 'இலக்கியமென்பது காலத்துக்கேற்ப மாறுதல் இருக்க வேண்டும். காலத்துக்கேற்ப புதுமைகள் புகுத்தப்பட வேண்டும்!' ஆழ்மனக் கிடக்கைகளை ஆற்றலுக்கேற்ப புதிய சொல்லாடலுடன் வெளிப்ப்டுத்தும் போதுதான் கவிதை பூரணத்துவம் பெறுகின்றது.



படிப்பகம்

*புத்தாடைகள் அணிவது*
*போன்றது தான்*
*புதுக்கவிதைகள்!*
*வாசிப்போர் நெஞ்சத்தை*
*காயப்படவைக்க வேண்டும்*
*பின்னர்.......*
*காயப்பட்ட நெஞ்சங்களுக்கு*
*ஒத்தடம் கொடுக்கவேண்டும்...!*

ஈழத்தில் ஐந்து தசாப்தங்களாக எழுதிக் கொண்டிருக்கும் பெரும் எழுத்தாளரான டொமினிக் ஜீவாவின் சுயசரிதை நூலான ‘எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்’ பல தடவை படித்தேன். எவ்வளவு எதிர்ப்புக்களுக்கு மத்தியிலும், இவரது இலட்சிய வெறி அவரைச் சாதிக்க வைத்தது. பெரும் பட்டப் படிப்புப் படித்த பண்டிதர்களால் மட்டுமே எழுத முடியுமென்ற...... ஒரு மாயையைத் தகர்த்தெறிந்து பேனா பிடித்த போராளியாய் நிற்கின்ற தளங்கள் மாறினாலும், தடம் மாறாமல் எழுதிக் கொண்டிருக்கின்ற பெரும் எழுத்தாளர். இவருடைய சுயசரிதை நூல் என் போன்ற வளர்ந்து வருகின்ற புலம் பெயர் எழுத்தாளர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். எழுத வேண்டும் என்று ஆர்வமிருந்தும், புலம் பெயர் வாழ்வியல் சூழலுக்குள் இயந்திரமாய்ப் பனிக்குளிரோடு மாரடித்துக் கொண்டிருக்கின்ற வேளையிலும், நம்பிக்கையை ஊட்டும் கருத்துக்கள். என்னையும் எழுதத் தூண்டியது என்றால் அது மிகையாகாது.

1991 ஆம் ஆண்டு டென்மார்க்குக்குப் புலம் பெயர்ந்தேன், அன்றிலிருந்தே என் கலைப் பயணம் ஆரம்பமாகியது என்று சொல்லலாம். கவியரங்கம், பட்டிமன்றம், கருத்தரங்கம் எனப் பல மேடைகளில் பேசும் சந்தர்ப்பம் கிடைத்தது. டென்மார்க்கின் பல இடங்களிலும் அறிவிப்பாளராகக் கூட, நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்குதல், தயாரித்ததல் என அன்றிலிருந்து இன்றுவரை பல கலை நிகழ்ச்சிகளிலும் குறிப்பாக நாடகம்; வில்லுப்பாட்டு போன்றனவும், மேடையேற்றியிருக்கின்றேன். நடிகனாகத் தொடங்கிப் பின்பு, கதையெழுதி, நெறியாழ்கை செய்வது வரை, இரசிகர்களின் விருப்புக்கேற்ப, நாகரீக மாற்றங்களுக்கேற்ப கலையை நவீனப்படுத்தி, டென்மார்க்கில் ஈழத்தமிழர்கள் மத்தியில் ஓர் இடத்தைப் பிடித்திருக்கின்றேன் என்பதில் மனநிறைவு.

www.padippakam.com

அந்த வகையில், இரசிகர்களின் பாராட்டைப் பெற்ற நாடகங்களாக எஞ்சினியர் மாப்பிள்ளை, வெளிநாட்டில் சாமியார், தாரத்தை வென்ற தாரம், வாங்க மாப்பிள்ளை வாங்க, கடலோரக் கனவு போன்றவை மக்களால் பெரிதும் பாராட்டப்பட்ட நாடகங்கள், இவற்றுள் சில, பலரது விருப்பதுக்கிணங்கப் பல நகரங்களிலும் பல தடவைகள் மேடையேற்றப்பட்டன.

அப்பப்ப குடும்பச் சுமைகள், புலம்பெயர் வாழ்வின் நெருடல்கள் வாழ்வை சினக்க வைத்தாலும், இந்த கலை இலக்கிய இரசனை தான் நம் போன்றவர்களை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. மனைவி ராஜினி, பிள்ளைகள் கஸ்தூரி, மிதுசன், வைஸ்ணவி ஆகியோரோடு டென்மார்க்கில் விபரொத் (vipperød) எனுமிடத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றேன்.

வாழ்விட மொழி டெனிஸ் ஆக இருந்தாலும், என்னால் ஆனவரை தமிழுக்குத் தொண்டாற்றிக் கொண்டிருக்கின்றேன் என்பதில் கொஞ்சம் மன நிறைவு அடைகின்றேன். அப்பப்போ ஐரோப்பிய தமிழ் வானொலிகளினூடாக ஒலித்த கவிதைகளும், சஞ்சிகைகளில் வெளியான கவிதைகளும், கவியரங்க மேடைகளில் பாடப்பட்ட கவிதைகளிலும் சில- மேலும் புதிதாக எழுதிய கவிதைகள் எனக் **'காற்றைக் கானமாக்கிய புல்லாங்குழல்'** என்ற கவிதைத் தொகுதி ஊடாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி! இந்தக் கவிதைத் தொகுப்புக்குக் கேட்டவுடன், மறுப்புச் சொல்லாமல் அணிந்துரை வழங்கிய கவிஞர் வண்ணை தெய்வம் அவர்களுக்கும், வாழ்த்துரை வழங்கிய கவிஞர் பொன்னண்ணா அவர்களுக்கும், அட்டைப்படம் தயாரித்த மேமன்கவி அவர்களுக்கும், மல்லிகைப் பந்தல் வெளியீடாக வெளியிட்டு வைத்துப் பதிப்புரை வழங்கிய டொமினிக் ஜீவா அவர்களுக்கும், தாய்க்குத் தாயாய், தாரத்துக்குத் தாரமாய் அன்பால் என்னைக் குளிப்பாட்டி இந்த இலக்கியத்துறைக்கு உறுதுணையாய் இல்லாது போனாலும், தொந்தரவு இல்லாமல் வழிவிட்டு நிற்கும் என் அன்பு மனைவி ராஜினிக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு,

***கண்டம் விட்டுக் கடல் தாண்டி***
***கண் காணாத தேசத்தில் இருந்தபடி***
***தமிழால் இணைகின்றோம்.***
***நெல்லிக்கனி மூட்டை அவிழ்ந்து சிதறியது போல,***
***ஐந்து கண்டங்களிலும் சிதறுண்டு***
***வாழ்ந்தாலும்***



படிப்பகம்

www.padippakam.com

*அன்னைத் தமிழொன்றால்......*
*நம் தமிழ் வாழும் என்பதற்குச் சாட்சி!*

சுவைஞர்களின் விமர்சனங்களே படைப்பாளிக்கு ஊட்டச் சத்து. பரந்த உலகில் வாழ்ந்தாலும், கணினியுலகத்தின் முன், தூரம் எதுவுமில்லை.

இக் கவிக்குழந்தையை
பெற்றெடுத்த கர்ப்பப் பையில்
நெருப்பைச் சுமந்தபடி
உங்கள் பதிலுக்காகக் காத்திருக்கின்றேன்
இக்கவிதைப் புத்தகத்தை வாசித்து முடித்தபின்
குறையையோ நிறையையோ எனக்கும் ஒரு வரியில் எழுதுங்களேன்.

இனி உங்கள் பொறுமையைச் சோதிக்காது
கவிதைக்குள்ளே நுழைவோம் வாருங்கள்!

என்றும் அன்புடன்
இணுவை க. சக்திதாசன்.

**Mr. K. Sakthythasan**
**Kiledvangsparken- 36,**
**4390- VipperØd,**
**Denmark.**
**T. P- 0045 47761019**
**Email: sakthy-@hotmail.com**



படிப்பகம்

www.padippakam.com

# காற்று வழி.....!

அவசர, அவசரமாய்
எல்லாம் நடந்தது– எனக்கு
எதுவுமே புரியவில்லை
அறிமுகமில்லாத முகங்களோடு
ஆரம்பமானது– அந்த
அநுபவமில்லாத பயணம்!

உடலெல்லாம் வியர்த்துக்
கொட்ட.......
வறட்டுத் துணிவை
வரவழைத்துக் கொண்டு
ஏறியுட்கார்ந்தேன்– அந்தச்
சின்ன மினி பஸ்சில்!

இளந்தென்றலை வடிகட்டி
பஸ்சுக்குள் உலாவ விட்டபடி– அந்த
மினிபஸ் சிட்டாகப் பறந்தது
கட்டுநாயக்காவை நோக்கி......

வியர்த்துக் கொட்டியது
உடலெல்லாம்........
தென்றல் வந்து ஒத்தடங் கொடுத்துத்
தேடியழைத்து வந்த பாடலையும்
என் காதினில் திணித்தது!



படிப்பகம்

www.padippakam.com

அன்னை வந்தென் கன்னத்தில்
முத்தமிடுவது போன்ற......
உணர்வு!
பொல பொலவென இரு விழிகளிலிருந்தும்
அருவியாய் ஓடியது கண்ணீர்.......

என்னை அள்ளியணைத்துத்
தலைகோதிச் சீண்டி விளையாடி
திசைதிருப்பி.....
என் கவலை போக்கி- விமான
ஓடு பாதை வரை
வந்தென்னை வழியனுப்பி
விட்டு மறைந்தது
அந்தத் தென்றல்!

அன்றுதான்.....
காற்று வழியில்
என் அகதிப்பயண ஆரம்பம்!



படிப்பகம்

www.padippakam.com

# தொலைத்த இரவு....

முகில்

போர்த்திய நிலவுக்குள்

ஒளிந்தொளிந்து.....

நாடு விட்டு
ஒரு கையால்
உயிரைப் பிடித்தபடி....
மறுகையால்
சிறகு விரித்தபடி.
அன்று தொலைத்த இரவுதான்
இன்னும் விடியவில்லை.



படிப்பகம்

# தாழ்வாரம்

ஒரு காலத்தில்
என் வீட்டுக்கும் இருந்தது
தாழ்வாரம்- இப்போ
என் வீடே இருப்பது
ஒரு தாழ்வாரத்தில் தான்.

மழையென்றால் மட்டும்
கொஞ்சம் சிணுங்கும்
மற்றபடி
மனதுக்குத் தான் கஷ்டம்
வாழ்வுக்கு அது பழகிப்போய்விட்டது.

சமையல், படுக்கை,
வரவேற்பெல்லாம்......
அதற்குள்ளேதான் ஆனா (லெ)ன்ன
அப்பப்ப சுவர் பேசும்.

உப்பு உண்ணாமல் விட்டு
கன காலமென்பதால்
என்னமோ.........
ரோசம் வருவதில்லை
வந்தாலும் வேறு வழி?

www.padippakam.com

தப்பென்று தெரியும் நம்மட
வீடிருந்திருந்தால்
ஏன் இப்படி......
யார்..... யாரோ வீட்டு
தாழ்வாரத்துக்குள் குப்பை கொட்டுவான்?

தேடித் தேடி
தேக்குமரத்தால்– அப்பு
ஓடிக் கட்டியவீடு
தேடுவாரற்றுக் கிடக்கு.
ஆற்ரையன் கோடிக்குள்ள......
எங்கட வாழ்வும் தேடுவாரற்றுக் கிடக்குது.





படிப்பகம்

# ரோஜா முள்

நேற்றுப் பெய்த மழையில்
இன்னும்
அழகாய்த் தானிருந்தது
ரோஜா!

முள் மட்டும் ஏனோ.....
புன்னகையிழந்து விசமேறிய
ஊசியாய்
முறுக்கேறியிருந்தது


ஒரு தண்டில் உருவான
சொந்தம் தானே– அது
எப்படி இரு வேறு வர்க்கமாய்
உருமாறியதோ?

ஒரு மடியில் தவழ்ந்து அதே
மார்பு முலை சூப்பி
ஒரே இரத்தத்தில் தானே
இரண்டும் கருவானது
எப்படி இரு வேறு வெளிப்பாடானது?

www.padippakam.com

பூவில் மென்மை
முள்ளில் வன்மை
தன்னழகை வெளிப்படுத்தி நிற்கிறது
ரோஜா மலர்!
உன் விரலைக் குத்தி ரணமாக்கி நிற்கிறது
ரோஜாமுள்
தண்டென்ன செய்யும் பாவம்!

ரோஜாவிற்காக....
முள்ளைச் சுமப்பதா?
முள்ளுக்காக
ரோஜாவை வெறுப்பதா...?





படிப்பகம்

www.padippakam.com

# பூங்கொத்து

புன்னகைத்துச் சிரித்தது
புகழுடன் அவன்
முன் மேடையில்......
கண்களில் நீர் கசிய
இரு கரம் கூப்பி வாங்கினான்.

பரவசத்தின்
உச்சியில் இருந்தவாறே
வீடு வந்து இறங்கினான்.

இந்தா......!
பூங்கொத்தென்றான்
அவன் தன் மனைவியிடம்.

பார்க்காமலேயே
பிளாஸ்ரிக்கா என்றவள்
தொட்டவுடன் வாடிவிட்டாள்.
முருங்கை இலை
வாங்கி வந்திருந்தால் கூட
வறுத்திருக்கலாமே...... என்றாள்.



படிப்பகம்

www.padippakam.com

# தாய்

உணர்வுடன் இன்பத்தையள்ளி
உதிரத்தில் பிசைந்து
சதைப்பிண்டமாயிருந்த உன்னை– தன்
கருவினில் இருத்தி
பத்துத் திங்களில் குழந்தையாய்
உயிர்ப்பித்தவள் தாய்!

பசியென்றவுடன் உணவாகி
உண்மையன்புக்கு முன் விலையாகி
கொடுமரக்கியென்றாலும்
தாய்மையென்ற நிலை வருகின்றபோது
ஈரமானவள்!

உதிரம் தந்த
உலகின் தெய்வம்
பேரம் பேசிடாப் பெண்ணின் உயர்தரம்
கண்ணையிமை போல்
காப்பவள் அன்றோ.

மனைவியைக் கண்டதும்
தாய்ப் பாசம்தான் குறையுமோ?
குறைந்திடினும்
உன்மீது குறையாவன்பு– அந்த
சுயநலமற்ற தாய் மீதிலிருந்துதான் சுரக்கும்.



படிப்பகம்

www.padippakam.com

'குண்டூசி' பட்டாலே....
தாங்கொண்ணாத்துயரத்தில்
அலறித்துடித்திடும் நீ
அவள் கருவறையில் இருந்து
எத்தனை தடவை
எட்டியுதைத்திருப்பாய்
என எண்ணிப்பார்?

நீ
எட்டியுதைத்திருந்தால் கூடத்
தன் கருவில் இருந்து
உதைத்த தாய்த்தான் ஏற்கும்
நடமாடும் தெய்வம்!

வலியைத் தனதாக்கி
உன்னையுருவாக்கியவள்
அனாதை மடத்திலே தவிக்க விடலாமோ?

தவிக்க விட்டாலும்
நீ தவிக்கின்றாயோவென்று
உன்னையே நினைத்தேங்குவாள்
உன் தாய்!





படிப்பகம்

www.padippakam.com

# வானமே நீ எங்கே இருக்கின்றாய்?

இருளுக்குள் புதைந்த இரகசியம்
இமயத்தில் விரிந்த அதிசயம்
என்முன்னே மல்லாக்காய்
நீட்டி, நிமிர்ந்து
மௌனப் படுக்கை படுத்திருக்கும் வானமே

என் மனதின் அமைதிக்காகத்
தினமும் நான்
உன்னைப்
பார்த்துத்தான் சாந்தியடைகின்றேன்!

வானமே!
உனக்குளில்லை இரவும் பகலும்– அது
எமக்குள்ளேதான் சூழ்ந்திருக்கிறது
உனக்கென்ன கவலை
நீயேன் அழுகின்றாய்?

சூரியனும் சந்திரனும்
உன் வீட்டுப் பிள்ளைகள் தான்
அவை தினம் எம் வீட்டுக்குத் தானே
வந்து போகின்றன
அதனால்தான் நீ அழுகின்றாயோ?

விடிவெள்ளிகள் மட்டும்
உன் மேனியெங்கும் அழகாய்ப்
பூத்திருக்கின்றனவே
ஆனால் என்ன?
விடிவதற்கு முன் அவை



படிப்பகம்

www.padippakam.com

விழுந்து சாகின்றன
அதனால் தான் நீ அழுகின்றாயோ?

உண்மையைக் கூறிவிடு
வானமே!
நீ எங்கே இருக்கின்றாய்
உன்னைத் தேடித் தேடிக் களைத்துவிட்டேன்.

சந்திரனைக் கண்டு விட்டேன்.
அது காற்றுப் போன பலூனென்று
அதை விட்டு, விட்டு
இப்போ.......
சூரியனைத் தேடுகின்றேன்.

சுட்டெரிக்கும் பார்வையாலே
ஒட்டுறவில்லாமல்
இருக்கிறாயே!

வானமே!
நீ எங்கே இருக்கின்றாய்?
எங்களுக்காய்க் கொஞ்சம்
பரிந்துரைக்க மாட்டாயா?

இந்தப் பூமிப்பந்தை
விட்டு, விட்டு
உன்னிடம் வந்துவிடத்தான் ஆசை
ஆனால் நீ..........
புதிராயல்லோ இருக்கின்றாய்!



படிப்பகம்

www.padippakam.com

# புன்னகையிழந்த மானிடம்!

புன்னகை தொலைத்துப்
புது நகையணிந்து- கொல்லையிலே
பூத்த முல்லைக் கொடிகள்!

நீண்ட நெடுங்குளிரில்
நெகிழ்ந்து நின்றுழைத்தும்
ஆண்ட எங்களினத்தின்
அவல நிலை கண்டு
அழுகின்ற புல்லாங்குழல்

மானிடம் தொலைத்த
மரகத மணிக்கு
புகலிடம் கொடுத்தது
புத்துணர்ச்சிக் கீதம்!

தாயென்று வேறு யாரிடம்
கேட்போம் தாய்ப்பாலை?
உரிமையோடு வேறு
எங்குதான் பார்ப்போம்
தாய் மண்ணை?

தாய் மடிதனில்
தங்கை கற்புப் பறிபோக
பாய் மீது தலை வைத்து
எப்படிப் படுப்போம்?

தன்மான வுணர்வை
மனதில் புதைத்து- கயவர்
கால்களில் மண்டியிட்டு கிடக்கலாமோ?



படிப்பகம்

பாத்தொடுத்துப் பாரதி
தொடக்கி வைத்த விடுதலையைத்
துவக்கெடுத்துத் தேடுகிறோம்
புன்னகைதான் என்றோ?

புன்னகை இழந்த
வெள்ளி நிலா
வெகுதொலைவில் தேய
உள் மனதில் கொழுந்து விடும்
கொடுந்துயர நெருப்பு

இருளும் நம் வாழ்வில்
தொடர்கதையாக
இரக்கமின்றிய போர்
முடியும், முடியுமென்றிருக்க
முடிந்து போகிறதோ
எம் வாழ்வு!

புதுவமைதி நெஞ்சிலே
பிறப்பெடுக்க முன்னம்
பறித்துவிட்டனர் பிஞ்சிலே
பாவியரே!
நஞ்சிலே ஊறி
நயவஞ்சகம் கொண்டு
வெஞ்சமரை எதிர் கொள்ளப் பயந்தவர்
சூதிலே கொல்கின்றனர்
அப்பாவித்தமிழரைச்
சூழுரைக்க வேண்டாமோ?

புன்னகையிழந்த மானுடமாய்
வாழ்ந்து மடிவதில்
யாருக்கென்ன இலாபம்?

www.padippakam.com

# இயற்கை

கருவாய், கிடந்த
என்னை ஈன்றெடுத்தாய்
சேறாய்க் கிடந்தாலும் மழையாய்
கழுவியணைத்தாய்.
தெருவில் கிடந்தாலும்
தென்றலாய்த்
தழுவியணைத்தாய்.

இயற்கையே.....!
மனதாரப் புகழ்ந்தேன்
எருவாய்க் கிடந்தாலும் என்னதான்
பயனில்லை நம் அன்னை மடிதனில்?

இயற்கையே அரவணைக்கும்
தாய் மடியல்லவா அதை
விட்டுவிட்டு
புழுவாய்த் துடிக்கின்றோம்
அன்னியத் தெருக்களில்.

இயற்கை பூவன அழகு
உந்தனது வாழ்வு
புளுங்கியேன் அவிந்து வாடிப் போகின்றாய்?

எழுந்து வா
இயற்கையோடு...... சேர்ந்து
ஊர்வலம் போவோம்
வழுக்கை விழுந்த வாழ்வை
தன்னிறைவாக்குவோம்!



படிப்பகம்

www.padippakam.com

# பௌர்ணமி நிலவு

என் வாழ்வில்
வெகு காலம்– நான்
இருளோடு வாழ்ந்துவிட்(டே)டன்.

இருளில் கிடந்த எனக்கு
இறைவா!
நீ தானே அந்த
நிலவை அறிமுகம்
செய்து வைத்தாய்– உனக்குக்
கோடி நமஸ்காரம்!

இரவே.....
இந்த நிலவிடமிருந்து
என்னைப் பிரித்துப் போடாதே
தொலைந்து போய்விடு.

இப்போதிருந்தே....
நான் பௌர்ணமி நிலவுடன் தான்
வாழப்போகிறேன்.

மேகமே!
நீயும் தூரப் போய் விடு.

நிலவுடன்........
இன்று எனக்கு
முதலிரவு!

விழியே!
உறங்கிப்போய் விடாதே
நின்று நிதானமாகப் பேசு.



படிப்பகம்

www.padippakam.com

# காற்று வெளிக் கிராமம்

ஆடி மாதக் காற்றுக் கூடக்
சிறைப்பட்டுப் போய்க் கிடந்தது
அந்தக் கிராமத்தில்.....

வானத்தில் கொட்டமிட்டுப் பறக்கும்
சிட்டுக்குருவிகளைக் கூடக்
காணவில்லை.
எங்குதான் போய்த் தொலைந்தனவோ?

கோயில் பூசையை முடித்து
விட்டு.....
சாமியை வைத்துப்
பூட்டிய சாவியுடன்
அவசரமாய் ஓடினார் ஐயர்!

நாய்கள் கூட
ஒன்றுக்கொன்று
இரகசியமாய்த் தங்கள்
பாஷையில் ஏதேதோ....
குசுகுசுத்துப் பதுங்கியது.

ஏன் தான் இப்படிப் பரபரப்பு?
அப்படியென்ன நடந்தது
அந்தக் கிராமத்தில்?

யாரையோ......
சுட்டுப்போட்டுக் கிடக்குதாம்
ஊரடங்கில்லாமலேயே.....
ஊரடங்கிவிட்டது!



படிப்பகம்

www.padippakam.com

சட்டித் தலைகள் வரும் நேரம்– அந்தக்
கிராமத்துக்குத் தெரியும்
அதுதான் அந்தப்
பரபரப்புக்குக் காரணம்!

அந்தக் கிராமம் எதிர்பார்த்தபடி
சட்டித்தலைகளும் அங்கு வந்தன.

எட்டியெட்டி அந்த
உயிரில்லாச் சடத்தை
எட்ட நின்று பார்த்து விட்டு
பக்கத்து வீட்டுப் படலையைத் தட்டி
சுட்டது யாரென்று கேட்டு
விழுந்தது பல அடி.

இது
அந்தக் காற்று வெளிக்கிராமத்தின்
சம்பிரதாயச் சடங்கு.

நேற்று! இன்று என்றல்ல
தொடர்கதையாகிவிட்ட
அந்த ஊர்த் தழும்பு!

சில மணி நேரம்
அந்த வீதியே நடுங்கும்
பின்பு வழமை போல
ஊர் நடக்கும்!

இது
விடுவிக்கப்பட்டாலொழியத்
தமிழனுயிர், ஒவ்வொன்றாய்
விடுவிக்கப்பட்டுக்
காற்று வெளிதானெஞ்சும்.



படிப்பகம்

www.padippakam.com

# ஊமை விழிகள்

சொப்பனம் கண்டு, கண்டு
சோர்ந்து போய் விட்ட
சோக மெய்யியல் இராகம்
கற்பனைக்கெட்டாத
பிரம்மை!

உணர்வைப் புரிந்து கொள்ளாத
உணர்வுகள்
சுமையை அறியாத
சுகந்தத்தின் தேடல்கள்.
உலகையறியா ஊமை விழிகள்
உள்ளுக்குள்ளே தேயும்
அழகுப் பிறைகள்!

நியாயத்தைத் தமதாக்கி
அநியாயத்தை நியாயப் படுத்தும்
(கை) ரேகைகள்

புரியாமல் வாழ்வைப்
புதிராக்கும் கேடுகள்
பிரிவின் வலியறிந்து
மௌனமாகும்
வாழ்வியல் கோடுகள்.




படிப்பகம்

www.padippakam.com

விதியென்று
வாழ்ந்திடும் இவர் சேர்க்கை
மதியால் திருத்த முயன்றும்
தோற்றிடும் இருப்புக்கள்.

வாழ்வொரு தரம்தான்
வசந்தத்தை இரு கரங்கொண்டேந்தினால்
கானல் நீராய்......
கரைந்திடும் சோகம்.

விட்டுக் கொடுப்போடு
நகர்ந்தால் தான்– வாழ்வில்
சொட்டுப் போடும்
அன்பின் ஈரம்.
காலம், காலமாய்
ஒட்டி நகரும்
உறவின் சாரம்!





படிப்பகம்

www.padippakam.com

# தலைவிதி

கிராமத்து (பூ)
ஒன்று மாலையாகி மணத்தது ஏனோ
நகரத்து (சா) வீடொன்றில் தான்.

வானத்துக் காற்று
வசதி பார்த்து வீசுவதில்
வியப்பொன்றுமில்லைத் தான்!

மானத் தமிழினத்தின்
சாபக்கேடு.....
தவறேதும் செய்யாமல்
சிறை வாடுவதே- எங்கள்
தலைவிதியென்றாகி விட்டது.

ஈனக் குரல் கேட்டு
இன்னல் தீர்ப்பார் யார்?
ஊனப்பிறவியாய்
உருக்குலைந்து போகின்றோம்.



படிப்பகம்

www.padippakam.com

# உன்னால் மட்டும் எப்படி?

நீ நாற்றுப் போட்டு
வளர்த்த ரோஜா
முள் தைத்து
உன் மேனியெங்கும் இரத்தக் காயம்!

உன்னைப்பார்த்து
ஊரே அழுகிறது
நீயோ.....

ரோஜாப்பூவின்
அழகைப் பார்த்து பிரமிக்கிறாயே!
அது எப்படி
உன்னால் மட்டும் முடிகிறது
சொல் நண்பா?



க. சக்திதாசன்



படிப்பகம்

# முரண்பாடுகள்

ஓங்கி வளர்ந்த.....
உயரிய விருட்சமாய்
உணர்வினிக்கும்- நம்
பண்பாட்டுக் கோலங்கள்!
பரந்து விரிந்த சீரியவுலகில்
புண்பட்டு கிடக்கிறது
மனித
மனங்களுக்குள்
முரண்பட்டுக்கிடக்கிறது.

கூவும்
குயில்களிடத்திலில்லைக்
கரையும்
காகங்களிடத்திலில்லை
பேசும் இதயங்களுக்குள் தான்
முரண்பாடு.

கணவன் மனைவிக்கிடையில்
பெற்றவர் பிள்ளைகளிடத்தில்
பேசும் நண்பர்களுக்கிடையில்
பேதை யெம் நெஞ்சுக்குள் தான் முரண்பாடு.



படிப்பகம்

உற்றவர் சுற்றவர்
உள்ளொன்றை வைத்துப்
புறமொன்றை பேசுபவர்
கற்றவர் கல்லாதவர்
மற்றவரெல்லோரிடத்திலும்
மலிந்து கிடக்கிறது
முரண்பாடு.

விட்டுக் கொடுப்பு
செல்லாக் காசாய்
வீதியில் துடிக்கிறது
விதண்டாவாதம்
விண்மீதேறித் தாவிக் குதிக்கிறது.

கருத்தில் முரண்பட்டால்
கழுத்தில் (கை) வைக்கும்
கயவர் கூட்டமொன்று
நெருப்பினில்
நடக்கின்ற புலம்பெயர் வாழ்வு!

பூத்த பூவும்
பிஞ்சிலே.....
பழுத்த வெம்பல்கள்
பெரியவர்களுக்கஞ்சாத கொந்தல்கள்.

தூக்கமில்லைக் கண்ணிலே
துயரம் நெஞ்சிலே
பார்க்குமிடமெங்கும்
முரண்பட்ட மனங்களே

சித்திரை- 2004

www.padippakam.com

## இவர்கள் எப்படி ? இப்படி!

எதையோ தொலைத்து
இரவுபகலாய் உறக்கம் தொலைத்து
எதைத்தான் தேடுகிறார்கள்
இவர்கள்?

கடனெடுத்தவனும் ஓடுகின்றான்
கடன் கொடுத்தவனும்
ஓடுகின்றான்.
முடிவிலெது– ஒரு
பிடி சாம்பல் தானே எச்சம்!

பெற்று வளர்த்து.....
ஏ(தே)தோ......
கற்பனையிலுழைத்து
உச்சக் கொப்பிலேத்தி வைத்து
பட்ட மரங்களாய் வாடும்
பெற்றவர்களை
சிறைக் கைதியாய் மூலையிருத்திக்
கண்டும் காணதவர்களாக
இவர்கள் எப்படி? இப்படி!

தேனாகப் பேசிப்பழகி
ஊரறிய உபசரிக்கும் மனிதனென
கஷ்டப்பட்டுக் கிடந்தவனை
ஏணியாய்த் தூக்கி நிறுத்தி
விட்டபின்......



படிப்பகம்

www.padippakam.com

நன்றி கெட்ட மனிதமாய்
இவர்கள் எப்படி ? இப்படி!

நாலு பணம் கண்டவுடன்
நாலு மனுசர் தேவையில்லையென்று
நளினம் போட்டுச் சுயநலமாய்
நாப்பிரட்டி வாழும்
சில மனிதர்கள்
இவர்கள் எப்படி? இப்படி!





படிப்பகம்

www.padippakam.com

# இன்றுநெற் காதல்!

இன்றநெற் கலியாணம்
இங்கிலீசு மலர்மாலை
சொந்தநெற் சுமையாக
சோகந்தான் தலைகாட்டும்!

பந்த பாசமெல்லாம்
மின்சாரமுன்னே
சம்சாரமானபோது
சங்கடங்கள் தானுள்ளே.

மந்திரமாய் வாழ்வு தொடங்க
மனமொத்த வின்பந் துலங்க
வள்ளுவனின் இரு வரி போதும்
இன்றநெற்றே விலகிவிடு.

சர்க்கரைக் கன்னத்தில்
சாக்கடை நீரை ஊற்றாதே
பூக்கடை நடுவில்
புயலே நீ வீசாதே.

உதயத்திலும் உறங்கிடும்
இதயத்தை எழுப்பிவிட்டு
இன்றநெற்றே!
உறங்கிவிடு மீண்டும் எழும்பாதே!



படிப்பகம்

www.padippakam.com

# உள்ளுணர்வு

சகுனம் பார்த்ததேன் புலம்பெயரப்
புவனமெங்கும் அலங்கோலம்
உருவமில்லா மனசுக்குள்ளே
அமைதி தேடி......
எங்குமலைந்து
உற்றுப் பார்த்தேன்– என்
உள்ளுணர்வில் யுத்தம்!

செத்து
மடியுது எத்தனை நினைவு
செந்தணலில்
எரியுது எத்தனை மனசு!

பூசையில்லாக் கோவிலில்
தெய்வமிருப்பதில்லைப் போல்
புன்னகை இல்லா இதயத்திலும்
அன்பிருப்பதில்லை.

மழைத்துளியின் ஏக்கம்
மண்ணில் விழும்வரை
மணப்பெண்ணின் ஏக்கம்
மனசு தெரியும் வரை!

உள்ளுணர்வில் யுத்தம்
உள்ளத்தில் மட்டும் சத்தம்
இரசனையே..... இல்லாதவுலகில்
இரத்த வெறியர்கள்தான் மிச்சம்!



படிப்பகம்

www.padippakam.com

# மானம்

தாய் நிலக்காற்று
நேற்றிருந்தது போலல்ல– அது
வீரியத்தில் சுழன்று
போர்ப் பறையை ஓங்கியறையும்
நேரம் வந்தாச்சு!

பூந்தோட்டமொன்று
புதராகியது
பெருந்தோட்ட மொன்று
சருகாகியது!

ஆர்ப்பாட்டமில்லாமலேயே
ஓர் இனமழிந்து
காட்டாற்றைப் போல.....
புலம்பெயர்ந்து அகதியானது.

மானம் பெரிதென்று
மண்ணோடிருந்திருந்தால் – இந்த
ஈன நிலையில்லா தொழிந்திருக்கும்!

உயிர் கூடோடிருந்திருந்தென்ன– மானம்
குழி தோண்டிப் புதைத்த பிறகு?
இருந்தும் இல்லாத நிலைதான்
நடைப்பிணமாக நாம்!



படிப்பகம்

www.padippakam.com

# புன்னகையிழந்த...... பூ!

பூவே
உன்னைப் பின்பற்றி
வாழத்தான் எனக்காசை.....
ஆனால், புயல் வந்து என்னை
புதராக்குகிறதே!

எவனெவனோ வந்து– என்
இதழைத் தொட்டு நலங்கேட்கிறான்
அருவருப்பாய் இருக்கிறது.....

என்னையேன் இங்கு
பிடுங்கி வந்தார்கள்
ஏதேதோ......
விசாரிப்புக்கள் வேறு
வீண் பழி சுமத்தல்கள்!

பூவென்றும் பாராமல்
பிய்த்தெறியும் அரவங்கள்
என்னைப் பெத்த தாயெங்கே?

அவளேன் என்னைத் தடுக்கவில்லை
அப்படியென்றால்......
அவளுக்கென்னானது?

என் வாழ்வின்
இந்த விரிசல் தீராதா?
எனை மீட்க யாரும்
வாராரோ.....?



படிப்பகம்

www.padippakam.com

# அழகு!

அழகை ஒளித்துவிட்டு
வானுறையில் புகுந்து கொண்டது
வெண்ணிலவு......

கதிரவன் வருகைக்காக......
கட்டியம் கூறிக் கண்ணசைத்தது
செவ்வானம்.

இருளைக் கலைத்து– விடியல்
பூக்கும் புதுத் தெம்பில்
புள்ளினங்களெல்லாம்
தென்றலோடு சேர்ந்து
எள்ளி நகையாடிப் பறந்தன......

வழமையைப் போலத்தான்
இருந்தது
அன்றைய விடியலும்.

கடலை விட்டு– மீண்டு
வரும் வேளை பார்த்து
கரைகளெல்லாம்.....
ஏக்கப் பெரு விழிகளோடு
மனைவி மக்களுடன் காத்துக்கிடந்தன.

நண்டு, கணவாய்
திருக்கையென்று– ஒட்டி
ஓரா விழையுடன்
கொண்டு வந்து கொட்டி
தரம் பிரிப்போரும்.....
முண்டியடித்துப்
பேரம் பேசும் வியாபாரிகளும்
கரையே அமர்க்களமாய்....
அழகாய்த்தான் இருந்தது பூமி!



படிப்பகம்

ஒருநாளுமில்லாமல்
அன்று மட்டுமேன்– கடல்
வற்றுகிறதேயென்று
ஆச்சரிய வினாத்தொடுத்து
விடைதேடமுன்னம்
கடல் வந்தது!

கரையோர ஊரோடு
உறவுகளைக் கடித்துக் குதறி
விடாப்பிடியாய்
அகப்பட்டவர்களை யெல்லாம்
இழுத்துச் சென்று
உயிரை உமிழ்ந்து விட்டு
உடலை மட்டும்
கரையில் துப்பிவிட்டுச் சென்றது

ஏன் இப்படி என்ற
கேள்விகளுக்கெல்லாம்
இடம் வைக்காமல்–
அசுரவேகத்தில்
ஆத்திரம் தீர்த்து விட்டு
அமைதியானது கடல்

ஆண்டுகள் கழிந்தாலும்–
மாண்டு விடாத
வரலாற்றுக் காயம்
மீண்டொரு கணம்
வந்து போனது என் நினைவில்!

இதற்குத் தானா?
இத்தனை நாளும் அமைதி காத்தாய்?
அமைதி கொள்ள மறுத்தது மனம்!

www.padippakam.com

# அகந்தையில்லா வாழ்வு!

நாட்டுக்குள்ளே வித்தை காட்ட
நாலு பணம் தேவையடி
ஓடாய்த் தேய்ந்து
உழைத்த பணம்
உதறித்தள்ள எத்தனை வழி!

'கேடாய்ப் படுத்தும் நவநாகரீகம்
கேளார் புத்தி கெடுத்தியாச்சுது'

'திரும்பிப் பாராய் மற்றவரை
திருத்திப்பார் உன் வழியைத்
திருந்தும் உலகம் நாளை
வருந்தும் எண்ணி இன்னாளை'

சிந்தையில் கொள்ளுறவே
முந்தை நினைவை– உன்
முன் நிறுத்து.
சந்தைக் கடையாக்காதே உறவை!
அகந்தையில்லா வாழ்வைத்தான்
இந்த மானிடம் போற்றும் நாளை!

செப்டம்பர் 2004
இனிய நந்தவனம்



படிப்பகம்

# பள்ளியறை

பள்ளியறைச் சொப்பனம்
பருவ வயதின் முற்பணம்
துள்ளிய மானின் துடுக்கடக்கும்
மன்மதக் கலையரங்கம்.

ஈரவிதயமிரண்டு
இனித்திடுமின்பச் சாரங்கண்டு
சோரம் போகா உறவில்
பூவிதழ் விரித்துப்
புதுமை தெளிக்கும்.

விழியிடை விளையாடி
விடிய, விடிய
கூதல் கலைத்த காதல்
கொடியிடை தன்னில்
கொள்ளைப் பிரியம்
முடியவில்லைத் தொடரும்.

கொஞ்சும் குளிருள்
மஞ்சம் கொஞ்சும்
குஞ்சம்!

விஞ்சும் இருளில்
விடிய, விடிய....
உடலோ கெஞ்சும்.
கஞ்சன்
சிந்தும் தேனோ
கொஞ்சம்.

கொஞ்சக் கொஞ்சத்
தொடரும்.....
உறவின் கூடலரங்கம்!

www.padippakam.com

## இங்கு சிலர்!

### (இங்கு- ஐரோப்பா, அங்கு- இலங்கை)

"கந்தையானாலும் கசக்கிக் கட்டி- அங்கு
சிந்தை குளிர வாழ்ந்தவர்கள்!
காஞ்சிபுரமானாலும்- இங்கு
ஒருக்காக் கட்டியதை- மறுகக்
கட்ட மறுத்து அகந்தையாகத் திரிகின்றனர்."

"பட்டினி கிடந்தாலும்
கடன் வேண்டாமென்று அங்கு சிலர்.....
வட்டி கொடுத்தாலும்
கட்டும் தாலி கெட்டியாக......
வேண்டுமென இங்கு சிலர்....."

ஒட்டிய வயிற்றோடு
ஆகாரமின்றி
அங்கு சிலர்......

ஒட்டிய வயிற்றோடு
ஆகாரமிருந்தும்
இங்கு சிலர்.......

ஒட்டிய தாலிக் கழுத்துடன்
அங்கு சிலர்.....
வெட்டிய தாலிக் கழுத்துடன்
இங்கு சிலர்.....




படிப்பகம்

வயதுக்கேற்ற நிறையில்
தாலியைக் கட்டி
வீட்டுக்குள் பூட்டி
கவறிங் கழுத்துடன்
இங்கு சிலர்.....

சிந்தையில் கொள்ளுறவே
முந்தைய நினைவை- உன்
முன் நிறுத்து
சந்தைக் கடையாக்காதே உறவை
அகந்தையில்லா வாழ்வைத்தான்
இந்த மானிடம் போற்றும் நாளை!

ஆடி, ஆவணி 2006
பூவரசு



www.padippakam.com

# நட்பு!

கண்டால் சிரிப்பு
கதைத்தால் விடுப்பு
விட்டால் பகைப்பு
இதல்ல நட்பு!

தொட்டால் சுடுமென்றாலும்
பழகி விட்டால்
தீயென்றாலும்
விலகாமல் இருப்பது தான்
நட்பு!

சொந்தத்தைக் காட்டிலும்
சுகமாய்....
ஜொலிப்பது
சுமையைக் களைந்தும்– புது
சொந்தத்தைக் காட்டுவது.

ஒன்றாய்ப் படித்தால்
மட்டும் நட்பன்று குன்றா மனதுடன்
பழகினாலே அது நட்பு




படிப்பகம்

www.padippakam.com

உண்மையன்பிருந்தால் ஒளிவு மறைவு
இருக்காது– சொந்த
விசயமென்றாலும்
நட்புக்குத் தெரிந்து தான்
பின்பு உறவுக்குத் தெரியும்.

வென்று மனதை
விதைக்க வேண்டும் பூவை.
நின்று நிலைத்து
வாழவைக்க வேண்டும்
நட்பு மரத்தை!

குன்றும் குழியுமிருந்தாலும்
நின்று நிரப்பி– பின்
தொடர்ந்தும் செல்வது
உண்மை நட்பு!





படிப்பகம்

# அந்நிய வாழ்வு!

புதைந்த அவன் நினைவுகள்
பனி வெளிகளில்
விதைத்துக் கிடந்தன....

சுணைத்து, சுணைத்து
சுறனை கெட்டுப்போன
வாழ்வினோடு மாரடிச்சு
ஒரு நாள்....
அவன்
உயிரும் போய்த் தொலையத்
தேடுவாரற்றுக் கிடந்தது
அவன் உடல் மட்டுந்தான்.

அந்த நாற்றத்தின் பிடுங்கலைச்
சில நாள் கழித்து.....
காற்றள்ளித் தெளித்தது
அடுத்த அயல் வீட்டிலும்.....

அடுத்தவன் வீடும்
எட்டிப் பார்க்காமலேயே....
பிணமேத்தும் வான்
வந்தெடுத்து புதைத்தது
ஒரு நாள்!

புதைத்த பின்தான்
சேதி கேட்டு,
ஒவ்வொருவராய் உறவுகளென
விசயம் விசாரித்துப்
புதைத்ததையெடுத்து- மீண்டுமொருநாள்
நடந்தது மரணவூர்லம்!

www.padippakam.com

வானொலிகளிலும் செத்தவன்
பெயரை விட,
உற்றாரின் பெயரை.....
அந்தஸ்துப் போல
அவரவர் இருக்கும் நாடுகளும்
பின்மொழியப்பட்டன.

சொல்லாமல் புதைத்ததற்காக வேறு
அவனுக்கு
வாழ்வழித்த அந்த நாட்டுடன்
சண்டையுமிட்டனர்.

வழக்குகள் போடவும்
முனைந்து தோத்து – அவன்
வங்கி இருப்பையும்
தேடியலைந்தனர்.

'வயதாகியும் இன்னமும் அவனுக்கு
வாழ்வமைத்துக் கொடுக்காமல்....
விட்டுவிட்டோமே– அவன்
மனக்குறைதான் என்னவோ?
ஏன்தான் இப்படியோ?'

இவையெல்லாமே
தேவையில்லாத வினாக்களாகத்தான்
இருந்தது அவர்களுக்கு!

சீட்டுக் கட்டினவனா? எடுத்து விட்டானா?
வேறாகத்தானிருந்தது
அவர்களின் தேடல்....

விடையில்லா வினாக்களோடு....
தொடரும்– இந்தத்
தொடர்கதைகள்!
நம்மினத்தின் சாபக்கேடு!



படிப்பகம்

www.padippakam.com

# மேற்கத்தைய மோகம்

மேட்டுக்குடிப் பெண்ணொருத்தி
மேற்குலகம் வந்தாள்.
மேற்கத்தைய மோகங் கொண்டு
முகம் புதைத்துறைந்தாள்!

ஆனைக்கோட்டை எண்ணை மறந்தாள்
ஆங்கில எண்ணை தடவி ஒளிர்ந்தாள்.
பூனை நாய்க்குப் புரதம் தேடி
இன்ரநெற்றைத் தட்டினாள்.
வேலை வெட்டியேதுமின்றி- படு
பிசியாய் ஓடினாள்.

பிறந்த பிள்ளை பட்டினியால்
இறந்த கதை வன்னியிலே.....
காது கொடுக்க நேரமின்றி
வெள்ளைக்காரன் பாட்டிக்கு
நேரமாகி விட்டதாக
பதை பதைத்து ஓடினாள்!

கோடை வந்ததென
கோலத்தை மாற்றியவள்- அரைகுறை
ஆடையுடன் குங்குமத்தைக் கலைத்து
குதூகலமாய்க் கொவ்விதழில்
புன்னகைத்தாள்!

சாதிசன கவலையின்றிச்
சதிராடும் மொரு கூட்டம்
போலியாக வலையுதிங்கே
போகுது தமிழர் மானம்!



படிப்பகம்

www.padippakam.com

# மென்மையா? இதயம்

பட்டிக்காறப் பட்டு
பருவமலர் மொட்டு
இரட்டைச் சுழிச் சிட்டு
இழகிய நெஞ்சத்து லட்டு!

ஊருக்காய் வாழ்ந்த பிள்ளை
உறவைத் தேடிக் கலங்கியதில்லை
ஊருக்குள்ளே வந்த நாகம்
உறவாய்த் திருடினான னவளிதயம்!

பட்டாம் பூச்சியாய்- பறந்த
அவளிதயம் திருடிய முட்டாள்.
மிட்டாய்க் கடையிலடகு வைத்து
மிட்டாய் திண்டானாம் பகட்டாய்.

அழகி இதயத்தைக் கண்ட
மிட்டாய்க் காரனின் மனமும்
மாறியதாம் பட்டென்று
பட்ட காய வலியின் சோகம்
தனிமையையே விரும்பியது அவள் மனம்
மிட்டாய்க் காரன் முடியாதென்றதால்
கிழிந்தது அவளிதயம்.



படிப்பகம்

www.padippakam.com

கிழிந்த இதயத்தால்– இனி
என்ன இலாபமென்று
மிட்டாய்க் காரன் வீசியெறிந்தான்.
அவளிதயத்தைச்
சேற்றுக்கரையோரம்....

இரத்தம் கசிய விழுந்த
அவளிதயத்துக்கு.....
முத்தங் கொடுத்தது
சேத்துக்குள் இருந்த தவளை!

மென்மையான
தவளையின் இதயங் கண்டு
பட்டவலி மறந்து சிரித்தது
பட்டாம்பூச்சியவளிதயம்!





படிப்பகம்

www.padippakam.com

# இன்றநெற்றில் சிரிப்பதில்லை.... காதல்

கடைக் கண் பார்வையில்.....
கருத்தரிப்பதில்லைக்
காதல்.

சின்னி விரல் தொட்டவுடன்
இன்ரநெற்றில்
சிரிப்பதில்லைக் காதல்!

மனத்திரையில் உட்கார்ந்து
புரிந்துணர்வுச் சீமெந்தில்
பூசப்பட்ட அன்பு
காதல்

சட்டென உடையாது
விட்டுக் கொடுப்பினில்
விலையுயிர் தன்னும் கொடுத்து
இதயத்தில் நெடுங்காலம்
வாழும் அன்புக் காதல்!



படிப்பகம்

www.padippakam.com

# பாவமிந்த இதயம்....
# பிழைத்துப் போகட்டும் விட்டுவிடு!

இந்தா உன்....
திறவுகோல்.
திறவுன் இதயத்தை!
பூட்டி வைத்து,
அழகு பார்த்து.....
பட்ட பின்பு பூமரத்தை
நட்டுப் பலனில்லை

விட்டயிடத்திலிருந்து
தொடர இது
ஒன்றும் யாத்திரையல்லக்
காதல்!

இளமையூஞ்சலாடும்
பின்பு..... அதுவே
ஏங்கியேங்கிச் சாகும்!
விட்ட பஸ்சிலேற
பாதை முடிந்து போகும்.

தொட்டவிடமெல்லாம்
சுவைக்கும்.
சோகந்தான் நிலைக்கும்
கட்டியிருக்கலாமென்றால் அது
கனவில் தான் நடக்கும்!

வெந்து, வெந்து செத்து
வேண்டாமிந்த
விபரீத விளையாட்டு
பிழைத்துப் போகட்டும்
விட்டு விடு.....
பாவமிந்த இதயம்!



படிப்பகம்

www.padippakam.com

# உனக்காக அழுவதா.....?
# சிரிப்பதா.....?

முற்றாமல் வெம்பிப் பழுத்த
மாங்காயொன்று
விழுந்து கிடந்தது
தொட்டப்பா வீட்டு முற்றத்தில்.
ஆசையோடு காத்திருந்த தொட்டப்பா
அதைத் தொடாமல்
பார்த்துக் கொண்டேயிருந்தார் எட்டத்தில்!

நல்ல பழம்
நல்ல ருசி வேற....
நல்ல விலைபோகுமென்று
ஊராரின் ஓர் எதிர்பார்ப்பு
வெம்பிப் போனதில்
மண்ணாகிப் போச்சுதெல்லாம்!


கெடுத்து, வெம்பப் பண்ணியவர்களெல்லாம்
ஓடியொளியக்
காகமணில் கூடத் தேடாமல்
தேடுவாரற்றுக் கிடந்தது
முற்றத்தில்.



படிப்பகம்

www.padippakam.com

பாவம்!
பிஞ்சிலேயே முற்ற நினைத்ததினால் தான்
இந்தக் கோலமோ?
பொறுமையா யிருந்திருந்தால்
ஒரு வேளை இராஜ விலை போயிருக்கும்.
இதயமிருந்திருந்தால் அழுதிருக்கும்– பாவம்
மாங்காய்க்கேது இதயம்
மாங்காய்க்காக......
மனதுக்குள் அழுதார் தொட்டப்பா
வலித்த இதயத்துக்கு
ஒத்தடங் கொடுத்தது இன்னொரு இதயம்
தவித்த இதயத்துக்கு.....
கிடைத்தது முள் கிரீடம்!





படிப்பகம்

## ஆச்சி வளவு வெளிச்சுப் போச்சு

போச்சு, போச்சு எல்லாம் போச்சு
பாழாய்ப் போன– இந்த
வெளிநாட்டாலே
ஆச்சி வளவு வெளிச்சுப் போச்சு!

பிஞ்சு மாங்காய்க்குக் கல்லெறிஞ்சு
ஓடியொளிஞ்ச குஞ்சு குருமானெல்லாம்– இப்ப
வெளிநாடு போனதால....
மாங்காய்தானிப்போ புளுத்துப் போச்சுது.

'பேத்தி பேரன்
விரும்பினமென்று
ஆச்சியும் இப்ப அவையோடு பறந்து
கன நாளாய்ப் போச்சுது!'

எப்படி வாழ்ந்த மனுசன்
நொந்து நூலாய்– இப்ப
துரும்பாயிழைச்சு....
ஆச்சியுமின்றி
அப்புபாடு அம்போவென்றாச்சு
சாதிசனமென்று நாலு
சனம் ஒன்றாய்க் கூடி– ஆச்சி
வளவுக்குள்ள நின்று
கதைத்துமல்லோ– ரொம்ப ...
ரொம்ப
நாளாப் போச்சு!

க. சக்திதாசன்

www.padippakam.com

இழவு விழுந்த வீடுமாதிரி....
ஆச்சி வளவு மாறிப்போச்சு!

'பத்துப்பிள்ளை பெத்துமென்ன?
திக்குக்கொன்றாய்ப் பறந்து
பாடுபட்டு அப்பு சேர்த்த
சொத்துமல்லோ....
வித்துப் போட்டு வாவென்றாச்சு...'

பத்தும் பல
திக்கிலிருந்தும்– தங்கள்
கணக்குக்கென்று அனுப்பிய
பணம் வந்து வந்து
குமியுது அப்புவின்ர வங்கியில.....

அப்புவின்ர தவிச்ச
வாய்க்கு– தண்ணி
தேத்தண்ணிக்
கடையிலிருந்து தான் வருகுது!

பாலும் பேப்பரும் தான்
வேளை தவறாமல்
வருகுது– அதைக் கூடச்
சில வேளை
பூனைதான் குடிச்சுப் போகுது.

'அப்பு நட்டு வைத்த
பாக்கு மரம்– நேற்றுப்



படிப்பகம்

www.padippakam.com

பெய்த மழைக்குப் பாறி
ஓட்டு மேலே சாய்ந்து கிடக்குது.
அது போலத்தான்
குத்தி நிமிர்த்தக் கூட
முடியாமல் அப்புவின்
வாழ்வும் சார்மனைக்
கட்டிலில்!'

கொத்தி, கொத்தி
பார்த்து விட்டு– காகம்
விட்டிட்டுப் போன
கொந்தி விழுந்த மாங்காயை
அணிலெடுத்து 'போஸ்மோட்டம்' பண்ணுது.

அடைப்பாரின்றி
ஆச்சிவளவு அம்மணமாய்க்
கிடக்குதென்று– பூச்சி,
புழுக்கள், புலுமச்சிலந்தி,
ஓணானென்று
அத்துமீறி உள்நுழைந்து
இரகசியக் கூட்டம் நடத்துமிடமாய்
ஆச்சி வளவு மாறிப்போச்சு!

தர்மக் கொலையும்
கூக்குரலும் நடந்தேற....
சாரை வந்து கொல்லைப் பக்கக்
கொட்டில் மீதேறிப் படமெடுத்தாட
எதுவுமே விளங்கிக்கொள்ள
முடியாதபடி அப்புவுக்கு
வாக்குமாறிப்போச்சுது!



படிப்பகம்

www.padippakam.com

காகம் செத்து, கோழி செத்து.....
செத்து, செத்துத் தாழ்ப்பாரின்றி
ஆச்சி வளவு நாற்றமெடுத்து
நாற்றத்தோடு நாற்றமாய்
அப்புவும் ஒருநாள்....
பாலைக் குடித்துக் குடித்து
கொழுத்துவிட்ட பூனை மட்டும்
அப்புவின்ர காலுக்குள் கிடந்தழுதது!

பாசத்திலா...? பாலுக்கா....?
'வேரறிந்தாலும் விழுதறியாக்காலம்
விழுதறிந்தாலும்
வேருக்குத்தான் நோகும்....!'

(இது பாறும் கலை விழாவில் (Denmark) பாடப்பட்ட கவிதை....)
2004 ஆவணி



படிப்பகம்

www.padippakam.com

## எட்டாத மனதில் கட்டிய ஊஞ்சல்!

எண்ணுக்கணக்கற்ற ஆசைகள்
அவன் மனதில் புதைத்து
ஏறிக்கொண்டிருந்தான்
பனி வெளி குடைந்து

தேடலுக்குத் தடையாகப்
பனிச் சாரல் கூட இல்லை.
கதிர் கூட
விடை பெற்ற பிறகும்
விடை கொடுத்தனுப்பியது
அவன் நிழல் மட்டுந்தான்.

உடலசைய மறுத்தாலும்
உணர்வது அசைவித்தது
நிழலாடும் நிஜமிது
உயிராடும் வரை ஓயாத புயல்!– அதுவும்
ஒருநாள் ஓயும்!
ஓய்ந்தது!

எட்டாத மனதில்
கட்டிய ஊஞ்சல் கற்பனையிலாடியது
அவன் தேடிய பணம் மட்டும்
புன்னகையோடு.....
அவன் சட்டைப்பையில்.....



படிப்பகம்

www.padippakam.com

# கல்விக்கண்......!

விபரமறியாப்பருவம்....
என் வீட்டு முற்றத்தில் நின்றபடி
வான் முகட்டைப் பார்க்கின்றேன்.
எங்கும் கரி மூட்டம்!

ஈழத்தின் தேகமிருண்டது
ஆவி நடுங்கியது
தென்கிழக்காசியாவின்
சொத்தென இருந்த
நூலகம் எரிந்தது!

கல்விக் கண்ணின் மூலம்
கற்பக தருவின் கூலம்
கண்முன்னே எரிந்த அவலம்
அகவை பலவானாலும்
ஆறாத சோகம்!



படிப்பகம்

# வேரின் இருப்பு!

விழுதின் வாழ்வு
வேரில்
வேரின் வாழ்வு
மண்ணில்!
வேரை மறந்து– சில
விழுது
விண்ணில்

கண்ணில் ஈரம்
கனவிலில்லை
சொல்லின் சோகம்
செயலிலில்லை
மைலின் தூரம்
பாசங்குறையுமா?
வேரின் பாசம் விழுதறியுமா?

உணர்வில் தோன்றும் விம்பங்கள்
உணர மறுக்கும் சொந்தங்கள்
உணரும் காலம் வரையிலும்
உறங்கிடுமா? உண்மைகள்!

உணர்ந்த பின்னால்– அது
வேர்களே....
உணர்ந்திடுமா
விழுதுகள்?

www.padippakam.com

காலக்கனவின் கண்ணாடி– நானோ!
இரும்புத் திரையின்
முன்னாடி!

கடமை எண்ணம்
மனதில் கொள்ள
அழுதிடும் ஆற்றாமை
உள்ள உணர்வுகள்.....

பிரிவுச் சோகம்
முள்ளாய்த் தைக்க
பேதையுள்ளம் பனியில் புதைக்க
மௌன ஊர்வலம்....
இரவும் பகலும்!

புகழின் உச்சியில்
மாலைகள் கனத்தாலும்– ஒரு
மாலைக் கருக்கலில்
ஆத்மா சுடும்!

காலக் கடிகாரத்தின்
இயற்கை முட்கள்– வாழ்வை
முடக்கியது அந்நிய தேசத்தில்!



படிப்பகம்

www.padippakam.com

# பொன்னாடை.....

புகழுடன்
வானதிரும் கரவொலியில்
மேடையில் அவன் மீது போர்க்கப்பட்டது!

எல்லாம் முடிந்து
வீடுவர அவன் தன் சயிக்கிளைத் தூக்கினான்
அது காற்றுப்போய் நின்றது.

இருள் சூழ்ந்த குச்சொழுங்கையால்
மெல்ல, மெல்லத் தன்
சயிக்கிளை உருட்டியபடி.....
அவன் வீடு வந்து சேர்ந்தான்.

அனுங்கி யனுங்கி
எரிந்துகொண்டிருந்த அரிக்கன்லாம்பும்
இவன் வரவு கண்டு
கண்ணை மூடிவிட்டது.

மண்ணெண்ணை வாங்கக் காசில்லை
கிடந்த எண்ணையில் தான்
இவ்வளவு நேரமும்
எரிந்தது என்றாள்
அவன் மனைவி!



படிப்பகம்

www.padippakam.com

பிள்ளைகள் படுத்திருந்த
பாயில் வைத்தே....
அவர்களைக் கொஞ்சிவிட்டு
பரிவுடன் மனைவியின்
கரங்களைப் பற்றி
என்ன சாப்பிட்டனி என்றான்.

முருக்கமிலைக்கஞ்சி
என்றவள்,
முற்றத்தில் நிலவிருக்கிறது
நீங்களும் கையோட குடியுங்கோவென
உடனிருந்து பரிமாற....

கஞ்சி குடித்தபடி....
பெருமிதத்தோடு
என் கவிதைக்குப் பொன்னாடை
போர்த்தார்கள் என்றான் அவன்!

வேண்டா வெறுப்போடு.....
பார்த்த அவன் மனைவி
கிழிஞ்ச காற்சட்டையோட திரியுதுகள்
பிள்ளைகள்
கோமணமாவது தைக்கலாமா?
என்றாள் அவள்!



படிப்பகம்

www.padippakam.com

# நிலம்.....!

செம்பாட்டு மண்.....
தார் படாத குச்சொழுங்கை
கடிவாளமில்லாக் காற்று
கரையோடு பேசுமலைகள்
அந்தி சாயுமழகு, மழை, மப்பு.....
இவையெல்லாமே......
முந்தியொருநாள்– நம்
நிலத்துக்கழகு!

ஊரிழந்து, உறவிழந்து
உட்காரக்கூடப் பயந்து.....
அந்நிய மொழி பேசப்பழகிவிட்ட
காற்றுடன்....
அந்நியப்பட்டுப் போய்விட்டது
இன்று எங்கள் நிலம்.

கள்ளிச் செடியும் நாகதாளியும்
எல்லைதாண்டி வளர்ந்து விட்ட
உறவெனக் கொள்ள....
முட்களோடுதான்
வாழும் நிலை நிலத்துக்கு!

நிலவுகூட
சிறைப்பட்டுப் போய்த்தான்
தப்பிப் பிழைத்துத் திரும்புது மீண்டு......

அமைதியென்று.....
வெறும் பேச்சுத்தான்.....
இரவுகூட முள்ளின் மேலதான்!

யமன் வந்து.....
தலை காட்டும் மயான பூமியாய்
இன்று.....
எங்கள் நிலம்!

www.padippakam.com

# ஒரு ஏழையின் முதலிரவு...!

கூரையின் இடுக்கினுள்ளே
தேனிலவு சிக்க.....
இன்பக் கனவுகளாயிரம்
ஒவ்வொன்றாய்த் திறக்க
அறிமுகமில்லா அறையினுள்ளே
அறிமுகமாகின்றது இரு இதயம்.
அநுபவமில்லாப் பயணத்துக்கு
அறிமுகக் காட்டியாய் இருள்.

பேசியே பாதியிரவு.
பேசாமல் மீதி
வெட்கத்தில்......
கூசிய மேனிக்குள்
மௌனம் தாழ் திறந்து
விரலோடு உதடும்....
நடந்திடும் இரவு!

பக்கத்தில்
நிலவிருந்து.....
தேயாமல் தேயும் ஆடைக்குள்
சொர்க்கத்துத் தேன் துளியாய்
வியர்வையும் இனித்திடுமிரவு!



படிப்பகம்

உதடுகள் நடந்த
காயச் சுவடுகள்....
உணர்வுகள்
மிதந்திட்ட
இன்பக் கனவுகள்
நொடியாய்ப் பறந்திட்ட போதிலும்
ஏக்கத்தின் சாயலுடன்
விடிந்தது பொழுது
கதிரும் மிதந்தது வானத்தில்.....

இரவல் காத்தாடியும்....
பஞ்சு மெத்தையும்
மட்டுமே
எஞ்சிச் சிரித்தன
அந்த முதலிரவு அறையில்!



www.padippakam.com

# சிறகு வேண்டும்.....!

கோடைகால வெய்யிலிலும்
மெல்லிய மழைத்தூறல்
மனதுக்கிதமான காற்று- என்
மேனியை வருட
எங்கும் துளிர் விட்ட மரங்கள்.
மரங்களுடன் புன்னகைத்தது
பூக்களும் தான்!

மரக்கொப்புக்கிடையில்
பறந்து, பறந்து- தன்
பாசையில்
கொஞ்சிக் குலாவிக் கொண்டிருந்த- அந்தச்
சிட்டுக்குருவிகளைப் பார்த்தவுடன்
என் மனதிலும் ஓர்
ஆசை
எனக்கும் சிறகு வேண்டும்.....!

ஐந்தறிவுக்கு இருக்கின்ற
சுதந்திரங் கூட
நமக்கில்லையே!

இறைவா!
அந்த ஆறாவது
அறிவைத் தந்து விடுகிறேன்
எனக்குச் சிறகு வேண்டும்.



படிப்பகம்

பியந்து போன– இந்த
வாழ்க்கைக்குள்– தினம்
மாய்ந்து, மாய்ந்து சாவதை விடப்
பரந்த வானில்
உன்னோடு சேர்ந்து பறக்க
எனக்குச் சிறகு வேண்டும்.

சந்தியில் கூட....
நின்று கதைக்க எனக்குச்
சுதந்திரமில்லை.
நொய்ந்து, நொய்ந்து
படுப்பதற் கெதற்கு இந்தக் கால்
எனக்குச் சிறகு வேண்டும்.

வட்டமிட்ட வானதுவில்– உன்
ஸ்ரம் போல பறந்துவிட்டு
சுற்றம், சூழல் சொந்தமென்று
ஒன்றாய் நீங்கள் கொட்டமிட்டு
கெட்டித்தனமாய் வாழ்ந்த வாழ்வில்
பாதிகூட இங்கு இல்லை.
உன்னைப் போல வாழ
எனக்குச் சிறகு வேண்டும்.

பாடுபட்டுச் சேர்த்த
சொத்தையெல்லாம்– பாழாய்
விட்டு....
ஓடு ஓடு வென்று
நாடு விட்டு....
ஓடி வந்த பின்னரும்

www.padippakam.com

ஓடு ஓடு வென்று
பணத்துக்குப் பின்னால்
ஓடுமிந்த வாழ்வெனக்குப் பிடிக்கவில்லை.
எனக்கும் சிறகு வேண்டும்.

வாழ்க்கைப் பூங்காற்றில்
வானம் பாடி
இயற்கை சீராட்டில்
நாளும் கூடி

தேடியதையுண்டு- அதில்
மனநிறைவும் கண்டு
உன்னைப்போல்
ஆடிப்பாடி
வானதுவில் நின்றாவது
சுதந்திரமாய்ச் சுத்த வேண்டும்- அதற்குச்
சிறகு வேண்டும்!





படிப்பகம்

## வெற்றுத்தாளொன்று பேசியது.....!

மேசை மீதிருந்த
வெற்றுத்தாளொன்று- என்னை
வெறித்துப் பார்த்தது.
தான் கற்றுத்தந்த பாடங்களையெல்லாம்
கடலைக்காரனிடம்
நிறைபோட்டு வித்துப் போட்டாயே
என்னையும் ஏன்......
வெற்றிடமாய் விட்டு வைத்திருக்கிறாய்?
ஒன்றில் கிறுக்கித்தள்ளு
இல்லையேல்
கிற்றுத்தள்ளு.

நாடுவிட்டு வந்து விட்டேனே- இந்த
கேடு கெட்ட வாழ்வை
எப்படியெழுதவென்று....
மௌனமாகிவிட்டாயோ...?
உன் வாழ்வை- இந்த
அடிமைத்தனத்தில் சிறை போட்டு விட்டாயோ?

சிந்திக்கத் தெரிந்த மனமே!
தூங்கி விடாதே- என்னை
வெற்றிடமாகவே
சாகடித்துவிடாதே!

www.padippakam.com

அன்னைத் தமிழை- நீ
சுவைத்தது உண்மையென்றால்
என்னை உன் விரலால்
குளிப்பாட்டு!

பிறந்ததன் பயனை
உன்னால்தன்னும்- இந்த
உலகம் பாராட்டும்!

பின்னர்....
என் மேனி
சுடச் சுட
கடலைக்கொட்டையுடன்
கிடந்து வெம்பி.....
குப்பைத்தொட்டியினுள்
போனாலும் காரியமில்லை- என்னை
மட்டும் வெற்றிடமாக மட்டும்
விட்டுவிடாதே!



படிப்பகம்

# நீழ் வானம்.....!

சூரியனைப்
பெற்றுத்தந்த தாய்மடி
தினம் தினம்.....
பிரசவித்துக் கொண்டுதான்
இருக்கிறது மறுபடி!

யுத்தமிடம்பெற்ற ஈழத்தைப் போல
இன்னுமேனோ உந்தன்
மேனியிலும் இரத்தக் காயம்!

உன்னிடத்தில் கூட
கொடியவர்கள் இருக்கிறார்களா?
இல்லை....
பெரும் யுத்தத்தின் மத்தியில்தான்
தினம் நீ
ஆதவனைப் பெற்றெடுக்கிறாயோ?

நிலா மகள் கூட
உன்னவள் தானே- அவள்
தானும் தன் பாடுமாய்த் திரிகின்றாள்
சில வேளைகளில்
அவளை மட்டுமேன்
எம்மிடத்திலிருந்து மறைக்கின்றாய்?
அவளும் பூப்பெய்து விட்டாளோ?

மாலைக்கருக்கலில்- என்
மனசு உன்னோடு பேசும்
உனக்குள்ளும் சோகமிருப்பதாய்த் தான்
எனக்குள் ஓர் ஊகம்!

ஏனெனில் நீ வாய் திறக்கும்
காலை மாலை இரு வேளையிலும்
உன் இரத்தச் சுவடு
காயமாய்த் தெரியும்!

மாலை வந்து விட்டால் மட்டும்
நீயோ கதிரவனைத் தாலாட்டி இறக்கும்
அழகோ தனியழகுதான்!
ஆனாலிந்த
ஆலாபரணங்களெல்லாம்
நிலா மகளுக்கு இல்லையே
உனக்கு மேனிந்த
ஓர வஞ்சகம்?

பெண்ணென்றால்
நீ கூட ஏளனமாய்த்தான் பார்க்கின்றாய்?
ஏனங்கு கூட இந்த
வரதட்சணைக் கொடுமை
இருக்கின்றதா?

அதனால்தான் நீ
மேகத்துக்குத் தூது விட்ட
கண்ணீர்!
இங்கு மழையாக
பொழிகிறதோ?

யாரின் சோகம்
யாரிடம் சொல்லியாறும்
இந்த மனசு!
கீழ் வானமே
இதற்குச் சாட்சி!

**14. ஆடி 2006**

## கலியாணக் கனவும்
## மல்பி பாலத்து உறவும்.....!

மனதினில்.....
கரு தரித்தவள் நினைவதனை
நெஞ்சினில் புதைத்துத்
குடும்பப் பொறுப்பினையும் முடித்து
அவளது கரம்பற்றி
வாழ்வு தொடங்கலாமென்றால்
வீழ்ந்தது பேரிடி!

டென்மார்க் சட்டத்தின் மாற்றம்
தமிழர் வாழ்வின் விட்டத்திலும் மாற்றம்.
கிட்டத்தில் எட்டாத காதலும்
வயது வட்டுக்குள்
போனபின்னரும் நீட்டல்கள்!

வந்தது ஒரு நாடு
வாழ்வது ஒரு நாடு.
குடும்ப வாழ்வுக்காய்
ஓடுவது இன்னொரு நாடு
எங்கே எம் தாய் நாடு?

மழை விட்டும்
தூவானமாறாத மேகமாய்
மனதுக்குள் குடையும் சோகம்
நெஞ்சுக்குள்தான் காயம்!

க. சக்திதாசன்

www.padippakam.com

கை கழுவி விட்டும்
கழுவாத காயத்தின் தழும்பு போல் ஈரம்!

கட்டிலில் கிடந்து கண்மூடிக் கிடந்தாலும்
கனவினிலிலும் கலியாண
ஊர்வலமாய் அவளின் வதனம்!

சட்டங்கள் கற்றுப் பட்டங்கள் பெற்றுப்
பயிலுக்குள் வைத்து விட்டு,
உயிரின் விட்டங்கள்
தேயும்வரை ஓடும் மானிடா
தமிழன் தலைவிதியும்
இதுதானடா!

(டென்மார்க்கில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தமிழர்கள் இலங்கையிலிருந்து பெண்ணெடுத்து டென்மார்க்கில் திரு மணம் செய்வதில் பல தடைகள் வந்த போது, அருகிருக்கும் சுவீடன் நாட்டுக்குச் சென்று அங்கு இருந்து கொண்டு தினமும் டென்மார்க் வந்து வேலை செய்து விட்டு சுவீடன் போகும் நண்பர்கள். கடலால் பிரிந்திருக்கும் இவ்விரு நாட்டுக்கு மிடையில் மல்பி பாலம். அவர்களின் நிலையிலிருந்து எழுதிய கவிதை.)



படிப்பகம்

www.padippakam.com

# அக்கரை(ற)ை.....!

கோடைகால சூரியனைக் கண்டு
வெட்கம் கொண்டது ஆடை.
முத்து முத்தாய்
முக்காடு போட்டது வியர்வை.

கடற்கரை மணலில்
படுத்திருந்தவன் மேனியெங்கும்
குரு மணல்கள்.....
அவன் மனம் மட்டும்
ஏனோ வாடைக்காற்றுடன்
அக்கரைக்குத் தாவிப் பறந்தது......

இக்கரையில்
இல்லாத சுகமொன்று
வாரியணைத்தது அக்கரையில்
சுனாமி ரேகை ஆங்காங்கே
சோகமாகப் படர்ந்தாலும்
இயற்கையோடு அவை மீண்டும்
வழமைபோலக் கொஞ்சி விளையாடின.....

தேக்கமரத்திலிருந்த குயில் கூவித்
தன் ஜோடிக்குயிலழைக்க.......
தேடுவாரற்றுக் கிடந்த
ஆடுகால் பூவரசை
தேடிப் பிடித்து ஜோடியணில்கள்
ஓடிப்பிடித்துக் கூடியின்பங்காண......



படிப்பகம்

www.padippakam.com

குரும்பட்டித் தேர் கட்டி
குஞ்சு குருமனாய்
நாம் செய்த குறும்புகள்
நெஞ்சினிலே அலை மோத......

மீண்டும் பிஞ்சுகளாய்ப்
போய்.....
அக்கரையில்
பிறக்கோமாவென
ஏக்கம் பிறக்கிறது.





படிப்பகம்

# காற்றைக் கானமாக்கிய புல்லாங்குழல்

- இணுவை க. சக்திதாசன்

வேரோடி......
நின்ற மண்ணை
இடறிக்
காற்றைக் கிழித்துக்
கண்டம் தாண்டி
தமிழோடு விளையாடி
பனிக்காற்றிலும்
சலியாது.....
உழைக்கின்ற உறவுகள்
இதுதான்
காற்றைக் கானமாக்கும் புல்லாங்குழல்!

பூவுக்கும் வண்டுக்கும்
இடையில் காற்று
காற்றுக்கும் புல்லாங்குழலுக்கும்
இடையில்
நாதம்!

தீப்பிடித்த
காட்டுக்குள்ளே
தப்பி வந்த மூங்கில் தடி
புல்லாங்குழல் ஆனபோது
காற்றுக்குப் பஞ்சமானது!
காற்றுக்கு எட்டுமட்டும்
கனவைச் சுமந்தபடி
மூச்சு வாங்கிக் கிடந்தது!
காற்றலையிலும்
சஞ்சிகையிலும்
ஏற்றங் கண்ட கவிகள்
இன்று–
காற்றைக் கனிவிக்கும் புல்லாங்குழல்
நூலுக்கு அழகு சேர்க்கின்றது.

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



# இணுவை. க.சக்திதாசன்

மொழியைச் சரியாக ஆழ்கின்றவன்- தமிழ் என்னும்
மூல நெருப்போடு வாழ்கின்றவன்
இவனின் பேச்சில் நாதம்! எழுத்தில் கீதம்!

தேசத்தின் தொன்மைபுரிந்து
தேனாய்க் கவி பொழியும் கவிஞன்
வீசும் தென்றலினைப்போல
மாசில்லாக் கருத்துக்களின் சொந்தக்காரன்
இதனாலேயே
ஆசுகவி எனப் பாராட்டப்பட்டவன்.

வாழ்வைப் புரிந்து அதனுள் நுழைந்து
கற்பனைகள் வற்றாத கருத்தோடும்- தனது
மைவற்றாத பேனாவோடும்
மனப்பற்றோடு எழுதும் பாவலன்

இவனின் எழுத்துக்கள்
வானவில் அல்ல-
வானளவும் பரந்து நிற்பவை!
இவனுடைய கவிதைகள்
பறக்கின்ற பட்டங்கள் அல்ல-
பறந்துகொண்டிருக்கின்ற பறவைகள்!

இவனும், இவனது கவிதைகளும்
நூற்றாண்டுகள் வாழவேண்டும்.
வாழும்!
வாழ்த்துக்கள்!

கலைஞர் காவலர்
வண்ணை தெய்வம்
பாரீஸ்.

ISBN 978-955-8250-41-9

படிப்பகம்